விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 19 நம்மான் 11 இதழ் 140

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 3—7—82

## 'தமிழ்ஈழ' இடைக்கால அரசு

### நியூயோர்க் மாநாட்டுக்கு வைகுந்தவாசன் பிரேரணை கொண்டுவருகிறார்

நியூயோர்க், ஜூலை 2

''இடைக்கால தமிழ்ஈழ அரசு'' ஒன்றை அமைக்க வேண்டும் என்ற பிரேரணையை நியூயோர்க் தமிழ் ஈழ மகா நாட்டில் தாம கொண்டுவரப் போவதாக லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு. கிருஷ்ணா வைகுந்த வாசன் நியூயோர்க்கில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

எனது இப் பிரேரணை இம் மகாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்படும பட்சத்தில் வெளிநாடு ஒன்றில் ''தமிழ் ஈழ அரசு'' பிரகடனம் செய்யப்படும். 1776ல் சுதந்திரம் பெற்ற அமெரிக்க அரசின் அடிப்படையிலேயே தமிழ்ஈழ அரசும் அமைக்கப்படும. என்றும் திரு. வைகுந்தவாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எனது பிரேரணை மகாநாட்டில் நிறைவேற்றப் படுமென்றே நான் நம்புகிறேன். அப்பிரேரணையைக் கைவிடுவதா இல்லையா என்பது கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் செல்வாக்கிலும் திற

(8-ம் பக்கம் பார்க்க)

★ நெல்லியடிச் சந்தியில் நேற்றிரவு சம்பவம்:

# பொலிஸ் ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம்! நால்வர் பலி!

## துப்பாக்கி நபர்கள் காரை கடத்தி மறைந்தனராம்!

(கரவெட்டி நிருபர் எம். சுபேந்திரன்)

**நெல்லியடிச் சந்தியில் நேற்றிரவு பொலிஸ் ஜீப்மீது இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகத்தில் நால்வர் பலியானுர்கள்! காயமடைந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

நெல்லியடிச் சந்தியில் நேற்றிரவு சுமார் ஏழரை மணியளவில், ரோந்து சுற்றிய பொலிஸ் ஜீப் வண்டியொன்று நின்ற போது இனம் தெரியாத நபர்கள் இந்த ஜீப் மீது திடீரெனத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்கள், இச்சம்பவம் நிகழ்ந்த அதே நேரத்தில் அவ்வழியாக வந்துகொண்டிருந்த ஒருகாரை மறித்து அதில் ஏறித் தப்பித்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

### காயமடைந்தவர் பலியானவர் விபரம்

முதலில் கிடைத்த செய்திகளின்படி, பொலிஸ்ஜீப்பில் பருத்தித்துறைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பக்டர் ஐ. திருச்சிற்றம்பலமும், சாரதி உட்பட ஆறு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இருந்தனர் எனத் தெரிய வருகிறது. இவர்களில் பொறுப்பதிகாரி திருச்சிற்றம்பலமும், கான்ஸ்டபிள்கள் சிவராஜா, ஆனந்த ஆகிய இருவரும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜீப் சாரதி ஆரியரத்ன குணபால, அருந்தவராஜா, மல்லவராச்சி ஆகிய நால்வரும் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. நவரத்தினம் உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

### பரு. நீதவான் ஸ்தல விசாரணை

உடனடியாக ஸ்தலத்திற்கு சென்ற பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் சம்பவம் நடைபெற்ற இடத்தையும் சடலங்களையும் ஜீப்

[8-ம் பக்கம் பார்க்க]

### ஜீப் கடத்தல் முயற்சி தோல்வி

பொலிஸ் சீருடையில் வந்த சுமார் 10 பேரே பொலிஸ்ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து பொலிசாரின் ஜீப்பை ஓட்டிச் சென்ற துப்பாக்கிக்காரர்கள் சிறிது தூரம் சென்றதும் ஜீப் நகர மறுக்கவே அவ்வழியால் வந்த காரை மறித்து அதனைக் கடத்திச் சென்றனராம்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் கடமையில் நின்றுகொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதை அடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று விட்டனராம்.

## யாழ். செயலகத்தில் செய்தி நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க செயலகத்தில் தகவல் திணைக்களத்தின் உதவியுடன் செய்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இம்மாதம் 13ம் திகதி யாழ்.

[8-ம் பக்கம் பார்க்க]

★ விமானக் கடத்தல்காரரை

## இத்தாலிக்கு அனுப்ப இலங்கை அரசு இணக்கம்?

(ரோம்)

கொழும்பில் உள்ள ஹோட்டலில் தங்கியிருக்கும் விமானக் கடத்தல்காரர் எக்கநாயக்காவை இத்தாலியிடம் கையளிக்க இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

சேபால எக்கநாயக்காவை இத்தாலிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தல்காரரான எக்கநாயக்காவை இத்தாலிக்கு அனுப்புமாறு இத்தாலி அரசு விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இலங்கை அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. [இ]

## யாழ். பல்கலைக்கழக மாணவர் கைதாகி விடுதலை!

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவன் ஒருவர் சந்தேகத்தின்மீது பாதுகாப்புப் படையினரால் நேற்று அதிகாலை 3 மணியளவில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

கோப்பாய்த் தொகுதியிலுள்ள கட்டப்பரகையைச் சேர்ந்த க.சர்வேஸ்வரன் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

குருநகர் தடுப்பு முகாமில் விசாரணை செய்யப்பட்ட இவர் பயங்கரவாதச் சம்பவங்களில் எதுவிதத்திலும் சம்பந்தப்படாததாகத் தெரிய வந்ததைத் தொடர்ந்து நேற்று நண்பகல் 12 மணிக்கு விடுதலைசெய்யப்பட்டார். (மா)

## டாலரை ஏற்க வங்கி மறுப்பு!

(கொழும்பு)

கொழும்பு 'இன்டர்கொன்டினன்டல்' ஹோட்டலில் தமது மனைவியுடனும் மகனுடனும் தங்கியிருக்கும் விமானக் கடத்தல்காரரான சேபால எக்கநாயக்கா கொழும்பில் உள்ள வெளிநாட்டு வங்கி ஒன்றில் தமதுபணத்தை வைப்புச் செய்யச் சென்றபோது வங்கி அதிகாரிகள் அப்பணத்தை ஏற்க மறுத்துவிட்டனர்.

கொழும்பு சிலிங்கோ மாளிகையில் இருக்கும் ''இந்தோ-சுவிஸ்'' வங்கிக்குச் சென்ற எக்கநாயக்கா, 275 அமெரிக்க டாலரை வைப்பிலிடக் கொடுத்தபோது அதனை ஏற்க வங்கிஅதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

(8ம் பக்கம் பார்க்க)

### ஐந்து நட்சத்திர ஹோட்டலில்...

[கொழும்பு]

'ஏயர் லங்கா' விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த விமானக்கடத்தல்

[8-ம் பக்கம் பார்க்க]

## “இடுப்பிலிருந்த ‘குண்டுகள்’ போலியானவை!”

பாங்கொக், ஜூலை 2

''இத்தாலி விமானக்கடத்தல் ஒரு போலிநாடகமே. இக் கடத்தல் நாடகத்தின் போது கடத்தல்காரர் இடுப்பில் கட்டியிருந்த வெடிகுண்டுகள் என்று கூறப்பட்டவை போலியானவை. அவை சக்தியற்றவை''

இவ்வாறு தாய்லாந்தில் இருக்கும் இலங்கைத் தூதுவர் திருமதி ஐராங்கனி மானெல் அபயசேகரா தெரிவித்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

### யாழ் மாவட்ட சர்வோதய நிலையத்தின் அதிஸ்டலாப மலகூடச் சீட்டிழுப்புத்திட்டம்

1982 யூலை மாதம் 1ம் திகதி ஏழாலை மயிலங்காடு கிராமத்தில் நடைபெற்ற முதலாவது சீட்டிழுப்பில் A–1816 இலக்கம் அதிஸ்டலாப மலகூடத்தை பெற்றுள்ளது. மேற்படி இலக்க சீட்டின் உரிமையாளர் உடன் புங்குடுதீவு சர்வவோதய நிலையத்திற்கு சமூகம் தருமாறு கேட்கப்படுகிறார்.

3746

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தீராந்திகள் 4''X2'', 3''X2'', 2½''X2½''. சமண்டலை, முதிரை, வேம்பு பலகைகளும் உண்டு த. நடராசா, மானிப்பாய் சுகாதாரக் கந்தோர் அருகில். 3728

12 இஞ்சி கிறைண்டர், 7ம் நம்பர் அல்லர் விற்பனைக்குண்டு. தேவாஸ் கிரைன்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3737

யாழ்ப்பாணம்- கல்வியங்காட்டில் ஆறுபரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. இரண்டு, மூன்று பரப்புகளாகவும் விற்கப்படும். விபரங்களுக்கு, 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3736

கொக்குவில் கிழக்கு ரெம்பிள் ரேட்டில் 4½ பரப்புக் காணி சாரதா மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். தா. சஞ்சீவராஜ், C/o பாலசுப்பிரமணியம், இல. 15, ரெம்பிள்ரேட், கொக்குவில்; 3734

மனோகரா படமாளிகைக்கு அருகில், நாவலர் ரேட்டில் உள்ள இரண்டு பரப்பு குடியிருப்பு நிலமும், கே.கே.எஸ். ரேட்டில் உள்ள மூன்று கடைகளும் விற்பனைக்குண்டு கடித மூலம் தொடர்பு: விளம்பர இல. 3733, C/o ஈழநாடுலிமிட், யாழ்ப்பாணம். 37 3

கோப்பாய் தெற்கில்' தபாற் கந்தோருக்கு அருகாமையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்குப்புறமாக உள்ள ஒழுங்கையில், 100 யார் தொலைவில் பத்துப் 10) பரப்பு தோட்டக் காணி ''அம்புலியப்புலம்'' விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்குந் தோட்டம் செய்வதற்கும் வசதியான காணி. விபரங்களுக்கு தொடர்பு கொள்க: கந்தையா நாகராசா, சங்கக் கடை அருகாமை பழையவீதி, கோப்பாய்தெற்கு. கோப்பாய். 3732

E. L. F. 350 றக் விற்பனைக்குண்டு. பினைன்ஸ் வசதிகள் செய்துகொடுக்கப்படும் நேரில் தொடர்பு கொள்ளவும். S. மகேந்திரன். வனிதா சேல்ஸ், டிஸ்ரிபூட்டர்ஸ், 19, யூப்ளி பசார், யாழ்ப்பாணம். 3731

சண்டிலிப்பாய் கல்வளை ரேட் முடிவு மதவடி ஆலங்குளாய் தொடக்கத்தில் 7 பரப்புக் காணியும் வீட்டுடன் கடையும் விற்பனைக்குண்டு. (மின்சாரம், தண்ணீர்சகல வசதிகளும் உண்டு) விபரங்களுக்கு: மேற்படி விலாசத்தில் திரு. S. மார்க்கண்டுவுடன் தொடர்பு கொள்ளவும். (3705)

## தேவை

பேக்கரி வேலையில் நல்ல அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. நேரில் சந்திக்கவும். 'சிவராஜபதி', சண்டிலிப்பாய். (மாசியாப்பிட்டி சந்திக்கு அருகில்) 3738

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தேவை

கமிசன் அடிப்படையில் பீடி சுற்றித் தருவதற்கு ஒப்பந்தகாரர் தேவை. தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, ஆர். வி ஜி. பீடிக்கம்பனி, 275 பீச் ரேட், யாழ்ப்பாணம். 3663

பெண் அறிவிப்பாளர் தேவை. ஒலிவாங்கிக் கருவிக்குரிய குரல் வளம் உடையவர்கள் மாத்திரம் 05-07-82க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மேஜர்ஷண், மணிக்குரல் விளம்பரசேவை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3696)

## பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல். செய்முறை அறிமுறையுடன் வகுப்புக்கள் ஆரம்பம்: 03-07-82 நேரில் வரவும். C. E. T. ஜலண்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைக்கு எதிரில்), 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3693)

வெல்டிங், மோட்டார் மெக்கானிஷம் ஆகிய வகுப்புக்கள் 05-07-82 காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும். தகுதிச்சான்றிதழ் வழங்கப்படும். கே. ஜீ' ஸ் இன்ஸ்ரிரியூட், 37, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (3717)

## வளர்முக நாடுகள் கடனில் மாற்றம்

லண்டன், ஜூலை. 2

உலகவங்கி, வளர்முக நாடுகளுக்கு கடன் வழங்குவதில் பல மாற்றங்களைச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

வளர்முக நாடுகளுக்கு வழங்கும் கடனில் 6 மாதங்களுக்கொருதடவை வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது

நாணய விகித மாற்றங்களுக்கேற்ப வட்டி விகிதமும் மாற்றம் செய்யப்படுமென்று கூறப்பட்டது. (வெ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம்மகாவித்தியாலயபரிசளிப்புவிழாஜுலை மாதம்4ம் திகதி மகாவித்தியாலய அதிபர் திரு. மகாதேவன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது

முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா கலந்து கொள்வார்: நிறுவுனர் நினைவு நாள் பேருரையை கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா நிகழ்த்துவார் திருமதி நடராசா பரிசில்களை வழங்குவார் [மா]

## பெய்ரூட்டில் தங்க அரபாத் தீர்மானம்

செய்ரூட், ஜூலை2

பெய்ரூட்டிலேயே தொடர்ந்து தங்கியிருக்கப்போவதாக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் ஜனப் யாசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

எந்த நெருக்கடியையும் சமாளிக்கத்தான் தயார் நிலையிலுள்ளதாகவும் அரபாத் தெரிவித்துள்ளார். [வெ]

## ''உயர்கல்விமானிய ஆணைக் குழுவின் பணிப்பை ரத்துச் செய்க''

### யாழ். மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''கொழும்பு, ஜயவர்த்தனபுர களனிபல்கலைக்கழகங்களில் தமிழ் கலைப்பீட மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற பணிப்பை உயர் கல்விமானிய ஆணைக்குழு ரத்துச் செய்யவேண்டும்'' எனக் கோரும் தீர்மானம் யாழ். மாநகராட்சி மன்றப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகராட்சி மன்றக் கூட்டம், முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றபோது, துணை முதல்வர் திரு. ம. அலோசியஸ் இப்பிரேரணையைக் கொண்டுவந்தார்.

பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''1979—80ம் ஆண்டிலிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்தும், 80-81 லிருந்து ஜயவர்த்தனபுர, களனிப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் தமிழ் கலைப்பீட மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற பணிப்பை உயர்கல்விமானிய ஆணைக்குழு ரத்துச் செய்யவேண்டும். அத்துடன் வணிகமாணி கலைப்பீடத்துடன் இணைக்கப்பட்டிருப்பதைத் தவிர்த்து அம்மாணவர்களை வணிகபீடத்துக்குட்படுத்த வேண்டும்.

(7ம் பக்கம் பார்க்க)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
சுன்னாகம்

## அறிவித்தல்

பின்வருவனவற்றிற்கு அரிசியாலை இயந்திர விற்பனையாளர்களிடமிருந்து கூறுவிலைகள் (Quotation) கோரப்படுகின்றன.

1. பச்சை அரிசி தீட்டும் இயந்திரம்— | Good Harvest Jet Rice Pearler Chinese make Model No. NP 12
2. மோட்டர்-(Motor) Indian make 3 Phase 25H.P.
3. Chinese Rubber Roller – 6''

கூறுவிலைகளை பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். சுன்னாகம் என்ற முகவரிக்கு 15-7-82க்கு முன்பு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
சுன்னாகம்,
30-06-82. (3724)

தாமாகவே முன்வந்து சத்திரசிகிச்சை மூலம்
கருத்தடை செய்வதற்கான
சிறீலங்கா சங்கம்

## யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை திட்டங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | சகல படிகளும் உள்ளடக்கிய வருடாந்த வேதனம் |
|---|---|---|
| 1. | திட்ட நிர்வாகி | ரூபா 6,000/- |
| 2. | எழுதுநர்/தட்டெழுத்தாளர் | ரூபா 12,000/- |
| 3. | சுகாதார போதனாசிரியர்/ ஆலோசகர் | ரூபா 14,000/- |
| 4. | அலுவலக சேவகர் | ரூபா 8 000/- |

### தகைமைகள்

1. திட்ட நிர்வாகி — 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், அலுவலக நிர்வாகத்திலும் கணக்கிலும் குறைந்தது 10 வருட அனுபவம் உடையவராகவும் ஆங்கிலத்தில் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
2. எழுதுநர்/தட்டெழுத்தாளர் — க பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், ஆங்கில அறிவு உடையவராகவும், ஆங்கில தட்டெழுத்தில் நிமிடத்துக்கு 40 சொற்கள் வேகத்தையுடையவராகவும் கணக்கியல் அறிவுடையவராகவும் இருத்தல் அவசியம்.
3. சுகாதாரபோதனாசிரியர்/ஆலோசகர் — பெண்பாலார் விரும்பத்தக்கவர். மக்கள் குடும்பத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். வாகனம் வைத்திருத்தல் வசதியாயிருக்கும்.
4. அலுவலக சேவகர் — ஆணாகவும், 30 வயதுக்கு உட்பட்டவராகவும் ஆகக்குறைந்தது 8-ம் வகுப்பு சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த சகல பதவிகளும் தற்காலிகமானவை. ஒரு வருடத்திற்கு மட்டுமே பதவிகள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 20-7-82 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

திட்ட பணிப்பாளர், சுகாதாரசேவைகள் கண்காணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

திட்டப்பணிப்பாளர்.

சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம். (3700)

## இன்றைய பலன்

ஆனி மாதம் 19-ம் திகதி
சனிக்கிழமை
(3—7—82)

மேடம்: திகைக்க வைக்கும் திருப்பங்கள் ஏற்படும். சிலர் புனைந்துரைகளால் வேதனைப்படுவார்கள் சிறிய விபத்துக்கு இடமேற்படுமாகையால் போக்குவரத்தை தவிர்த்துக் கொள்ளவும்.

இடபம்: ஓன்பததின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும். பெற்றோர் ஆதரவும் உண்டு குடும்பத்தில்மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்: நாள் எல்லாம் அலைச்சல். உடல் நலிவுதோன்றும். பிணிக்கு இடம் கொடாது சுகாதாரத்தைப் பேணவும் குடும்பக் கவலையுடன் குறுக்குவழி தலையீடு புதிர் போடும்.

கடகம்: தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணை நன்று.

சிங்கம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பார்த்த பதவிக்கு இன்று முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

கன்னி: வாழ்க்கையில் புதிய உற்சாகம் பிறக்கும். கருத்து வேற்றுமைகள் மறையும். பல வழிகளிலும் பொருள் வரவுக்குமிடமுண்டு. நீண்ட நாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம்.

துலாம்: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும். சிலர் கடன் தொல்லைகளால் பாதிக்கப்படுவார்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சிக்கல்கள் தோன்றலாம்.

விருச்சிகம்: செய் தொழிலில் தடுமாற்றநிலை தோன்படும். வேண்டிய ஒருவரை பகைத்துக் கொள்ள நேரிடும். குடும்பத்தில் சிறுபிணி தோன்றும் மனத்திடம் விரும்பத்தக்கது

தனு: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது. நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

மகரம்: பேராசையின்மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள். இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

கும்பம்: ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும், பொருள்வரவுக்கு இடமுண்டு. விளைபொருள் விருத்தியும் வியாபார முன்னேற்றமும் ஏற்படும். நல்ல நாளாகும்.

மீனம்: நீண்ட நாட்களின் பின்பு இன்று நிறைவான தினம். எதிர்பார்த்த பொருள் கைவந்து சேரும். பிரமச்சாரிகளின் வாழ்க்கையில்மாரனின் கணை தாக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கும்பாபிஷேகம்

(பரந்தன்)

புராதன பெருமைவாய்ந்த பரந்தன், குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 5ம் திகதி முதல் 8ம் திகதி வரை நடைபெறும். [இ]

★ இத்தாலிய விமான கடத்தல்காரர் சேபால

# 'ஜெயவேவா' கோஷமெழுப்பி மக்கள் வரவேற்றனர்!

## ஆயுதக்கிளர்ச்சி

லண்டன், ஜுலை 2

வட யேமன் நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக அங்குள்ள பெரும்பான்மை மக்கள் ஆயுதக் கிளர்ச்சி செய்துவருவதாக அறிவிக்கப்பட்டது.

## கைதுசெய்யும் திட்டம் கைவிடப்பட்டதாம்!

(கட்டுநாயக்கா)

புதுடில்லியிலிருந்து பாங்கொக்கிற்கு இத்தாலிய விமானத்தைக் கடத்திச் சென்ற இலங்கை இளைஞரான சேபால எக்கநாயக்கா தமது மனைவி, நாலுவயது குழந்தை சகிதம் நேற்று முன்தினமிரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார். இவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த போது அங்கு குழுமியிருந்த பலநூற்றுக்கணக்கான மக்கள் 'ஜெயவேவா' கோஷமெழுப்பி வரவேற்றனர்.

### ★ பணத்தை எண்ண 90 நிமிடம்

மூன்று லட்சம் டாலருடன் இலங்கை வந்துள்ளதாக சுங்கதிணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார் அந்த டாலர் நோட்டுகளைச் சோதனையிட்டு எண்ணிமுடிக்க 90 நிமிடம் எடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் கொண்டுவந்த தோல்ப்பை ஒன்றினுள்ளேயே இந்த டாலர் நோட்டுக்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ★ பொலிஸ் பாதுகாப்புடன் காரில் 'பவனி'

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய சேபாலாவும் மனைவியும், குழந்தையும் அங்கிருந்து காரொன்றில்' ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றிற்கு பொலிஸ் பாதுகாப்புடன் சென்றனர். இரண்டுவாரகாலம் இலங்கையில் தங்கப்போவதாக இவர் தெரிவித்துள்ளார். விமான நிலையத்தில் சாதாரண பிரஜைகள் போல் இவர்கள் நடத்தப்பட்டார்கள்.

### ★ இத்தாலிய அரசுதான் பணம் வழங்கியது

இத்தாலிய அரசாங்கமே தனக்கு மூன்று லட்சம் டாலர்களையும் வழங்கியதாகவும், அவ் இத்தாலி விமானநிறுவனம் அப்பணத்தை வழங்கவில்லையென்றும் விமானத்தைக் கடத்திய இலங்கை இளைஞர் தெரிவித்தார்.

### ★ பாடம் புகட்டினராம்

இத்தாலிக்கு மீண்டும் செல்ல தமக்கு விசா மறுக்கப்பட்டமையினாலே, அந் நாட்டிற்கொரு பாடம் புகட்டும் பொருட்டே அதன் விமானத்தைக் கடத்தியதாக இவ்விளைஞர் கூறினர்.

### ★ உதவியாக இருந்தவர்கள்

கடத்தப்பட்ட விமானத்தில் தமக்கு உதவியாக 4 இத்தாலியரும், 2 லெபனன்காரரும் இருந்ததாகவும், இவர்கள் 200 மீட்டர் தூரத்திற்குத் துளைத்துச் செல்லக்கூடிய குண்டுகளை வைத்திருந்ததாகவும் விமானத்தைக் கடத்திய இளைஞர் தெரிவித்தார். இவர்களுடன் கப்பப்பணத்தைப் பகிர்ந்துகொள்ளப் போவதாகவும் அவர் கூறினர்,

### ★ பாஸ்போர்ட் பறிமுதல்

விமானத்திலிருந்து இறங்கியதும் இவரின் கடவுச்சீட்டு [பாஸ்போர்ட்] இலங்கைப் பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

தாய்லாந்து அரசாங்கத்திற்கு இலங்கை அரசு அளித்த வாக்குறுதிக்கேற்ப இவ்ரைக்கைது செய்யும் திட்டம் கைவிடப்பட்டதாகவும் கூறப்பட்டது.

### ★ 32 மணிநேர நாடகம்

விமானக்கடத்தல்காரர் சேபால எக்கநாயக்கா, இத்தாலிய விமானத்தில் முப்பத்து இரண்டு மணிநேரம் பிரயாணிகளை பணயம் வைத்திருந்த பின்னர் பகுதிபகுதியாக அவர்களை 'விடுதலை' செய்தார்.

நிருபர்களிடம் அவர் நேற்று முன்தினமிரவு தெரிவிக்கையில்; தமது சகாக்கள் ஆறுபேரும் யாருக்கும் தெரியாமல் ஏனைய பிரயாணிகள் போல வெளியேறி விட்டனர் என்ற கூறினர்.

இரு ரஷ்யப் பெண்கள்:

## விண்வெளிப் பயணத்துக்கு ஆயத்தமாகின்றனர்!

மாஸ்கோ, ஜுலை 2

சோவியத் யூனியனைச் சேர்ந்த இரு பெண்கள் விண்வெளிப்பயணத்தை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களையும் பயிற்சிகளையும் பெற்றுவருகின்றனர். இத்தகவலை சோவியத் விண்வெளிப்பயிற்சிக் கலலூரி ஒன்றைச் சேர்ந்த இயக்குனர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

பயிற்சிக்குள்ளாகியிருக்கும் இவ்விரு வீராங்கனைகளினதும் வயது இருபத்தியேழும் முப்பதுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இவ்விருவரும் திருமணமான பொறியியலாளர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் யூனியனே இதுவரைக்கும் பெண்ணொருவரை விண்வெளிக்கு அனுப்பிய நாடாக விளங்குகின்றது. வலென்டினு ரெறெஸ்கோவா என்ற பெண்ணே 1963-ல் விண்வெளிக்குச் சென்றிருந்தார் தற்பொழுது இவரின் மகள் விண்வெளியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை மேற்கொண்டு வருகின்றாரெனத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவும் தற்போது ஐந்து பெண்களைத் தனது விண்வெளி விமானத்தில் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (கி)

இயக்கச்சி கொள்ளைவழக்கு;

## சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்!

(சாவகச்சேரி)

இயக்கச்சி கொள்ளை வழக்கில் சந்தேகநபர்களில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில் நீதிபதி வி. கனகசபை முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

இயக்கச்சி, முகாவிலைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை, கார்த்திகேசு என்பவரது வீட்டில் 1982 மே 1ம் திகதி இரவு 8200 ரூபா பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்ததாக சந்தேகத்தின்பேரில் செல்லத்துரை ஜெயபாலன் அல்லது பாலசுப்பிரமணியம், சிவகுரு, நாகராசா என்பவர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி சந்தேக நபர்களில் 1ம் எதிரியைத் தம்பிப்பிள்ளை கார்த்திகேசு அடையாளம் காட்டினர். கார்த்திகேசுவின் மனைவி சரஸ்வதி எவரையும் அடையாளம் காட்டவில்லை.

சந்தேக நபரை அடுத்த மாதம் 14ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர் உத்தரவிட்டார். (க)

## இராணுவச்சட்டம் அமுலுக்கு வந்தது

லண்டன், ஜுலை. 2

கௌத்தமாலாவில் இராணுவச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அரச விரோத சக்திகளுக்கு இங்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; இங்கு 500 கெரில்லாக்கள் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சரணடையாத கெரில்லாக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக கௌத்தமாலா ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (வெ)

## எம். ஜி. ஆர். இளைஞர் முன்னணி

சென்னை ஜுலை 2

எம். ஜி. ஆர். இளைஞர் முன்னணியொன்று தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ் நாடு நிதியமைச்சர் திரு வி. ஆர். நெடுஞ்செழியன் இம்மாதம் 7ம் திகதி இம் முன்னணியை ஆரம்பித்துவைப்பார். [வெ]

போக்லண்ட் யுத்தம்:

## ஆர்ஜென்டீனாவிடம் நஷ்டஈடு கோர பிரிட்டன் ஆராய்கிறது

லண்டன், ஜுலை 2

போக்லண்ட்தீவுகள் யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஆர்ஜென்டீனாவிடம் நஷ்டஈடு கோருவது பற்றி பிரிட்டன் ஆராய்ந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

போக்லண்ட் தீவுகள் விவகாரம் தொடர்பாக பிரிட்டன் ஆர்ஜென்டீனாவுடன் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தத்தில் நஷ்டஈட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமா என்பது பற்றி ஆராய்ந்து வருவதாகப் பிரிட்டன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

## ஆயுத நிறுத்தம்

லண்டன், ஜுலை 2

இஸ்ரேலுக்கு இராணுவ ஆயுதங்களை வழங்குவதை பிரிட்டனும், பிரான்ஸ்சும் நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

## பல்கலைக்கழக மாணவன் பலி!

இஸ்லாமாபாத், ஜுலை 2

பாகிஸ்தானில் பல்கலைக்கழக மாணவர்களிடையே இடம்பெற்ற மோதலில் பல்கலைக்கழக மாணவனொருவன் பலியானதாக அறிவிக்கப்பட்டது,

இம்மோதலின் போது 7பேர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது. [வெ]

## பெய்ரூட்மீது புகைக்குண்டு வீச்சு

பெய்ரூட், ஜுலை 2

பெய்ரூட்மீது இஸ்ரேலியப்படைகள் நேற்று முன்தினம் புகைக்குண்டுகளை வீசியதாக அறிவிக்கப்பட்டது. இதனல் பலர் அங்குள்ள தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் கூறப்பட்டது [வெ]

## ஆர்ஜென்டீனு புதிய ஜனதிபதி

புவனஸ் அயர்ஸ் ஜுலை 2

ஆர்ஜென்டீனுவின் புதிய ஜனதிபதியாக முன்னள் இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ஞானே பதவியேற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆர்ஜென்டீனுவின் பத்துப் பேரைக்கொண்ட அமைச்சரவைக்கு இவரே தலைமை தாங்குவாரென்றும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

### மணிவாக்கு

எல்லா மக்களையும் சில நாளைக்கும், சில மக்களை எல்லா நாளைக்கும் முட்டாளாக்க முடியும்: ஆனல் எல்லோரையும எல்லா நாளைக்கும் முட்டாள்களாகக முடியாது.

— ஆபிரகாம்லிங்கன்

# நமது நோக்கு

## 'சபாஷ்' சர்வதேச பயங்கரவாதம்

இத்தாலிய பேயிங் விமானக்கடத்தல்காரரான இலங்கை இளைஞர் தனது மனைவி, மகன் சகிதம் அறுபது லட்சம் ரூபாய் பணயப் பணத்துடன் கொழும்பு வந்தபோதுவிமான நிலையத்தில் ''ஜெயவேவா'' கோஷத்துடன் மக்கள் வரவேற்றனர் என்கிறது செய்தி.

நம்ப முடியுமா? என்று ஆச்சரியப்படும் எமக்கு இன்று இங்கு எதனைத்தான் நம்பமுடியாதென்ற சந்தேகம் எழுகின்றது.

பயங்கரவாதத்திலும் மூன்றுவகை; உள்ளூர்பயங்கரவாதம், அரச பயங்கரவாதம், சர்வதேச பயங்கரவாதம்.

சுதந்திர இலங்கையில் உள்ளூர் பயங்கரவாதம் 1971ல் ஆரம்பமானது. இன்று வடக்கில் பரவியிருக்கின்றது. இது அரசியல் பயங்கரவாதம்; எனவே அரசபயங்கரவாதம்இதற்கு மறுத்தாகை தொடர்ந்து தொழிற்படுகின்றது.

சர்வதேசபயங்கரவாதம், —விமானக்கடத்தல்போன்ற துணிகர சம்பவங்கள்— இன்றுதான் இலங்கைக்கு உலகப்படத்தில் இடமளித்திருக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டுதான், விமான நிலையத்தில், கடத்தல்வீரர் சேபாலஎக்கநாயக்காவிற்கு ஒரு வீரனுக்குரியவரவேற்பு நடந்திருக்கலாம்.

உலகனைத்திலும் பெருந்திகில் உண்டாக்கிய இந்த இலங்கை இளைஞன் தன்னுடைய புத்திரபாசமே இந்த 'வீரச்செயலுக்கு' தூண்டுதலாக இருந்ததெனச் சொல்லியிருக்கிறார்.

''மகன் தந்தைக்
காற்றும் உதவி,
இவன் தந்தை
என்நோற்றான்கொல்
எனுஞ்சொல்'.

அவருடைய நான்குவயது மகனுக்கு வள்ளுவர் கூற்று இன்று புரியாவிட்டாலும், வருங்காலத்தில் சிங்களத்திலோ அல்லது இத்தாலிய மொழியிலோ படிக்கும் வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.

அறிவு முதிர்ச்சிஅடைந்த காலை மகன் தந்தையின் செயலை ஒரு தவச்செயல் என்று கருதாவிட்டாலும், தனது உயிரே ஒரு பெரிய அழிவைத் தடுத்ததென்று பெருமிதம் கொள்ளக் கூடும்.

இந்தப் பயங்கரச்செயலை எவர் எவ்வாறு பார்த்தாலும், இலங்கைக்கு இதுவரையும் கிடைக்காத அவமானமும், அவமதிப்பும் இன்று கிடைத்துள்ளது.

பணம் இரத்திக்கல் போதைபோன்ற சட்டவிரோதமான பொருட்கள் சர்வதேசரீதியில் கடத்தப்படுவதற்கு இலங்கை ஒரு கேந்திர ஸ்தானமென்ற பிரபல்யம் பெற்றிருக்கின்றது. அது தக்க சுங்க பாதுகாப்பில்லையென்பதையே குறிக்கின்றது.

இன்றைய கடத்தல் நாடகம் வேறுவிதப்பட்டது; சாதாரண கடத்தலில் ஆரம்பமாகி, நிலம் கடல் கடந்த நிலையில் விண்வெளிக்கு [illegible]கிறது. விமானக் கடத்தல் உலகுக்கு புதுமையல்ல; அரசியல் வர்த்தகம், கொள்ளை சம்பந்தமான விமானக்கடத்தல்கள், அவற்றால் ஏற்படும் [illegible]கள் நாமறிந்தவை.

இன்றைய சம்பவம் இத்தாலிய அரசுக்கு தடுமாற்றம் ஏற்படுத்தியது. அகில உலகுமே அதிர்ச்சியடைந்தது; நாட்டு மக்களின் உயிர்களுக்கு உலை, ஒரு நாட்டின் ஆட்சிக்குச் சவால்; அதன் பணம் அபேஸ்;— இவை போன்ற அசாதாரணமான அக்கிரமங்கள் புரியும் வல்லமைக்கு எத்துணை வர[illegible]

மனைவியுடனும் மகனுடனும் இவற்றையெல்லாம் இலங்கை தாண்டிவிட்டது; தமது பிள்ளைக்காக, பிள்ளையின் பராமரிப்புக்காக, ஒரு விமானத்தைக் கடத்தியதும், தமது கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால்— அவற்றுள் 60லட்சம் ரூபாய் பணயப்பணம் ஒரு கோரிக்கை—விமானத்தை நூற்றுக்கணக்கான பிரயாணிகளையும் தகர்க்க ஆயத்தமானதும் ஒரு தனித்துவ சம்பவம்!

இத்தகைய சர்வதேச பயங்கரவாதியை எந்தச் சட்டத்தின் கீழ் எவ்வாறு குற்றத்துக்குட்படுத்தலாமென்று எங்கள் அரசு சட்டமாஅதிபருடன் ஆறுதலாக ஆலோசனைசெய்கின்றது. அதுவரைக்கும்' அமாவாசை' கா[illegible]ா?

புலிகள், சிங்கங்கள் போன்[illegible]மய 'மிருகங்கள்', மனிதர்கள் இந்த நாட்டின் அமைதி வாழ்க்குப் பங்கம் விளைவித்தால், உலகிலே அவமதிப்பு ஏற்படுத்தினால் எவ்வித பாகுபாடுமின்றி மக்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது தெளிவு; வரவேற்பும், சித்திரவதையும் இதற்குரிய செயல்கள் அல்ல.

இதற்கு தயக்கம் ஏற்பட்டால் இன்றைய இளைஞருக்கு இது ஒரு புதுவித வேலைவாய்ப்பு அளிக்கவும், அதற்குரிய பயிற்சியின் தேவைக்கும் வழிகோலும்.

## றமழான் சிந்தனை

''ஆதாமுடைய மகன் செய்யும் எல்லா நற்செயல்களும் (ஒன்றுக்கும்) பத்திலிருந்துஎழுநூறுவரை பிரதிபலன் இரட்டிப்புச் செய்யப்படுகின்றன. ஆனல் நோன்பை மாத்திரம தவிர ஏனெனில் அது எனக்குச் சொந்தம். நானே அதற்குக் கூலி கொடுப்பேன் என்று அல்லஹ் கூறுகின்றார்.''

ஸஹர் முடிவு 4-23
நோன்புத் திறக்கும் நேரம்: 6-29
தொகுப்பு: சுல்பிக்கா—கௌது.

### இந்துபோர்ட் இராசரத்தினம்

# பரந்த நோக்கத்தோடு பணிபுரிந்த பெரியார்



(நாளை 4ம் திகதி இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் நினைவுதினம். அதையொட்டி இக வெளியிடப்படுகிறது.)

இந்து போர்ட் இராசரத்தினம் என்று சொன்னல்தான் எல்லோருக்கும் அந்த மகாபுருடனைப் பற்றி விளங்கும். படித்தவர்கள், பெரியவர்கள், அரசியல் தலைவர்கள் மத்தியில் அவர் 'ஒனரபிள்' இராசரத்தினம் எனப் பெருமைநிலவ விளங்கினர்.

இன்று மந்திரிமார்களுக்கு வழங்கும் 'ஒனரபிள்' என்னும் மதிப்புடை அடைமொழி அக்காலத்தில் சட்டசபை அங்கத்தவர் பெயர்களுக்கு முன் வழங்கியது. சுப்பிரமணியர் இராசரத்தினம் அவர்கள் 1924 முதல் 1931 ஆம் ஆண்டு வரையும் இலங்கைச் சட்டசபையில் யாழ்ப்பாணத்து மத்திய தொகுதியின் தெரியப் பெற்ற மதிப்புடைப்பிரதிநிதியாயிருந்தவர்.

தலைசிறந்த தேசிய வாதியாய் இலங்கை இலங்கையர் என்னும் பரந்த நோக்கத்தோடு பணிபுரிந்தவர்களுள் இராசரத்தினமும் ஒருவர் அவர் 1931ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தார் அரசாங்க சபைத்தேர்தலை ஒன்றியொதுக்கல் செய்தபோது தாமும் உடந்தையாயிருந்தவர். பின்னர் 1934ஆம் ஆண்டில் உபதேர்தல் நடைபெற்ற போது தேசீயம் பேசித்தேர்தலில் தோல்விகண்டவர்.

### பழம் பெருமை.

யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் தங்கள் பெருமையை ஒல்லாந்தர் காலம் முதலாக வரையறை செய்து வழங்கி மகிழ்வது வழக்கம். ஒல்லாந்தர் இலங்கைக்கரைநாடுகளைப் பரிபாலனஞ் செய்த காலத்திலே மயிலிட்டி, உடுப்பிட்டி, கோப்பாய், இருபாலை முதலிய ஊர்கள் பெருமதிப்புக்குரியனவாயிருந்தன.

உடுப்பிட்டியில் சந்திரசேகர முதலியாரின் வழிவந்த கதிர்காம முதலியாரும் இவர் மைந்தர் குமாரசாமி முதலியாரும் பெரிய

### க.சி. குலரத்தினம்

படிப்பாளிகள் புலவர்கள் இவர்களின் குடும்பத்தவர் எல்லோரும் பிரபந்தங்கள் பாடுவதில் வல்லவர்களாயிருந்தனர் சிலர் நாடகங்கள் எழுதுவதிலும் சுவைததும்பிய தனிபாடல்கள் பாடுவதிலும் சாமர்த்தியம் வாய்ந்திருந்தனர் பொதுவாகப்படித்தகுடும்பத்தார் எனப்பலரும் வாயார வாழ்த்திய குடும்பம் இவர்களின் குடும்பம்.

புரந்தர நாடகம் பாடிய குமாரசுவாமிப்புலவர் தனிப் பாடல்கள் பாடிய முத்துக்குமார முதலியார் விறலிவிடுதூதுபாடிய சந்திர சேகர முத

[5ம் பக்கம் பார்க்க)

## மருந்துக் கூட்டுத்தாபன யாழ். கிளை மூடும்நிலை?

1972-ம் ஆண்டு மிகவும் கோலாகலமாக திறக்கப்பட்டு மிகவும் போற்றக்கூடியவகையில் சகல மருந்துகளுடன் செயல்பட்டுவந்த இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபன யாழ்ப்பாணக்கிளை கடந்த 3 வருடங்களாக மந்த நிலைக்குவந்து மூடும் நிலைக்கு வந்து விட்டது..

பலமைல்கள் தூரத்தில் இருந்துவரும் வைத்தியர்களும் நோயாளிகளும் கடந்த சில காலங்களாக மேற்படி ஸ்தாபனத்தில் மருந்து கிடையாததால் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். இதுபற்றி நோயாளரும் வைத்தியர்களும் கருத்துத் தெரிவிக்கையில் சில நாட்களில் மேற்படி ஸ்தாபனம் பூட்டப்படும் இருப்பதோடு மருந்துகள் இல்லாமல் இருப்பதாகவும் குறைபட்டுக்கொண்டனர். இதுபற்றி அறிவதற்கு மேற்படி ஸ்தாபனத்துக்கு சென்றிருந்தேன். அங்கு பல மருந்து தட்டுப்பாட்டால் விற்பனை இல்லாமல் அங்குள்ள ஊழியர்கள் மிகவும் உற்சாகம் இழந்தநிலையில் காணப்பட்டார்கள். அவர்களிடம் விசாரித்தபோது மருந்து இல்லாததாலும் வேறுகுறைபாடுகளாலும் நோயாளிகளின்வருகை குறைந்து விட்டது.

மருந்து இருந்தால் திராசு இல்லை. திராசு இருந்தால் மருந்து இல்லை. இரண்டும் இருந்தால் விலைதெரியவில்லை என்றனர். இதுசம்பந்தமாக மேற்படி கிளை பொறுப்பதிகாரி திரு. வ. சிறிகாந்தாவை அணுகியபோது பலகுறைபாட்டால் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த முடியவில்லை என கவலை தெரிவித்தார். குறைபாடுகளைப்பற்றி தலைமை காரியாலயத்துக்கு பலதடவை கடிதம் எழுதியபோதும் பதில் வரதாமதமாகின்றது என்றும் அண்மையில் பல கிராமசபைகளும் மருந்துகள் வந்தும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும் இதனல் வாடிக்கையாளரின் வெறுப்பையும் சில வேளைகளின் வசைமாரிகளையும் பெறவேண்டியநிலை ஏற்படுவதாகவும் கூறினர்.

தான்பலமுறை நிலைமையை விளக்கி கடிதம் எழுதியும் பதில் கிடைக்காதமையால் கடசியில்தான் நேரில்வந்து நிலைமையை விளக்குவதாக கடிதம் எழுதியபோது சித்த ஆயுள்வேத சம்மேளனத்துக்கு கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக எழுதிஉள்ளார்களாம்.

நிலையப்பொறுப்பதிகாரி தலைமைக் காரியாலத்துக்கு கடிதம் எழுதுவார், தலைமை காரியாலதத்தில் இருந்து பதில் வரதாமதம் ஆகும் இப்படியே அவர்கள் இழுபடிபடுவார்கள் இடையில் வைத்தியர்களும் நோயாளர்களும் அல்லவா திண்டாடவேண்டியுள்ளது ஆர்குத்தினலும் எங்களுக்கு அரிசிதான் தேவை கூட்டுத்

(5-ம் பக்கம் பாரிக்க)

# மக்கள் கருத்து

## பொன்னன மனிதர்



பொன். தியாகராஜா

ஆடை அரை மனிதன் என்பது தானேபழமொழி. ஆனல் அமரர் தியாகராஜா வாழ்ந்த காலத்தில் அணிந்த உடை, அதுவே முழுமனிதனே என்று ஐயுறத்தோன்றும். ஏனென்றால் அவர் உடையில் காணப்பட்ட முழுமையையே அவர் மேற்கொண்ட பணிகளிலெல்லாம் காணமுடிந்தது. எந்த விழா, வைபவம் ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டாலும் அதற்குத் தேவையான யாவற்றையும் ஒரு காகிதத்தில் குறித்துக் கொள்வர்.

ஒருவர் பெரிய மனிதர் என்று மதிப்பது எப்படி? தனி மனிதர் ஒருவரை தமக்குச் சொந்தம் என்று பலரும் கொண்டாடும் போதும் நிறுவனங்கள் தாம் உருவாக்கிய தாக தம்பட்டமடிக்கும் போட்டியில் இறங்கும்போதும் பெரிய மனிதத்தன்மை நிரூபணமாகிறது. அது 'தியாகர்' விஷயத்தில் நிதர்சனம்.

வாசிகசாலையில் கையில்பிரம்புடன் அமைதியை நிலைநாட்ட ''ஹீயர் ஹீயர்'' என்பதோடு சரி, அந்தப்பிரம்பு யாரையும் பதம் பார்த்ததில்லை. அத்தகைய ஆளுமை. கவர்ச்சி மிக்க தோற்றம். அழகான உடை. கம்பீரமான நடை. போதாக்குறைக்கு சுகந்த ''சென்ட்'' வாசனை. இது 1940க்கு முன்பின்பாக. ஒவ்வொருவருடமும் கிரிக்கெட், மெய்வல்லுநர்' முதலிடம் பெற்ற இல்லம், உதைபந்தாட்டம், படைபயில் குழு இவற்றின் நிழற்படங்கள். 'ஃப்ரேம்' போடப்பட்டு ஒழுங்காக மாட்டப்பட்டிருக்கும் சீர்—பிற்காலத்தில் கர்நாடக இசை ஒலிப்பதிவு நாடாக்கள், 'கசெட்டுகள்' அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒழுங்கி—இந்தச் சில்லறை அலுவல்களில்கூட அவர் காட்டிய ரசனை—அயலில் உள்ள பெண்கள் சேலைத்தேர்வுக்கு இவரை ஒரு 'ஏஜண்டாக' வைத்திருந்தார்களென்றால் பார்த்துக்கொள்ளவேண்டியது தான் ஒருபெண்ணுக்குதனக்கு ஏற்ற கலரும் டிசைனுமுடைய சேலையைத் தெரிந்தெடுக்கத் தெரியாதாம், இந்த மன்னனல் முடியுமாம். சரிதான்.

மனிதர்களோடு பழகும் பண்பும் நகாசும் இருக்கிறதே

7-ம் பக்கம் பார்க்க)

# நாவலர், யோகர் கனவு நனவாகின்றன

-- நீதியரசர்

(கிளிநொச்சி)

இந்து போதகர் பயிற்சி நெறியை இலங்கையில் முதல் முதலாக ஆரம்பித்ததன்மூலம் ஆறுமுகநாவலர், யோகசுவாமிகள் ஆகியோரின் கனவுகள் நனவாகின்றன என்று கிளிநொச்சி குருகுலத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்து போதகர் பயிற்சியின் ஓராண்டு நிறைவு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரும் அகில இலங்கை இந்துமாமன்ற தலைவருமான திரு. வி. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி இந்துமகா வித்தியாலய அரங்கில் இவ் வைபவம் நடைபெற்றது.

இந்துமத திணைக்கள பணிப்பாளர் திரு. அ. பாஸ்கரதாஸ் பேசுகையில்:

காலத்திற்கு காலம் உயர்ந்த தியாக மனப்பான்மை கொண்ட பலபெரியவர்கள் இந்து மக்கள் மத்தியில் தோன்றியதாலே ஒழுக்கநெறி தவருது இந்துமதம் இன்றும் சிறப்பாக உரிய முறையில் பாதுகாக்ககூடியதாக இருக்கிறது. இங்கு பயிற்சி நெறியை முடித்து வெளியேறும் இந்து போதகர்கள் கிராமங்கள் தோறும் சென்று நமது மதத்தினதும் சமுதாயத்தினதும் மறுமலற்சிக்காக பாடுபட வேண்டும் என்ருர்.

கிளிநொச்சி கொத்தணி பாடசாலை அமைப்பின் தலைவரும் கல்விமானுமாகிய திரு இரா, சின்னத்தம்பி பேசுகையில், உலகெகனும் இந்து மத நெறிகள் பேணப்பட்டாலும் இந்துமதத்திற்குரிய இடத்தை வழங்கிய நாடு நம் நாடே. இங்கு மதங்களிடையே நெருங்கிய ஒருமைப்பாடும் ஐக்கியமும் நிலவுகிறது. இதற்குஇன்றையஅரசே காரணமாகும். இந்து மதத்தின் அதி உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கப்போகும் ... பற் ... ற ... கல்வி போதனை நிலையத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்ருர்.

இவ்விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து தத்துவப் பேராசிரியர் கலாநிதி வே. இராமகிருஷ்ணர், இந்து வளர்ச்சி கழக செயலாளர் இ. சற்குருநாதன் அப்பு, அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் திரு கே. சிவராசா, இந்து போதகர் செல்வி ராணி கணபதிப் பிள்ளை, புலவர் செல்வி எஸ். விசாலாட்சி, சித்திரச்சுடர் ஆசிரியர்திரு நா. செல்லப்பா, வித்துவான் மு. கந்தையா உட்பட பலர் உரையாற்றினர்கள். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. குருகுல அதிபர் திரு வே. கதிரவேலு நன்றியுரை கூறினுர்.

# ''கம்யூனிஸ்டுகள் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள்''

[யாழ்ப்பாணம்]

'கம்யூனிஸ்ட்டுகள் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள் அவர்கள் ஒருபொழுதும் ஜேர்மன் பாராளுமன்றத்திற்கு தீ வைத்திருக்கமாட்டார்கள். சுதந்திரமாக உலாவி வந்த கம்யூனிஸ்ட் தலைவர் ஜோர்ஜிடிமிற்றோவை சிறையில் அடைப்பதற்கும் ஏனைய கம்யூனிஸ்ட்டுகளை செயல்படவிடாமல் தடுப்பதற்கு மேகிட்லர், டிமிற்றோவுக்கெதிரான வழக்கை சோடித்தார்.''

இவ்வாறு உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும், பல்கேரிய சோஷலிசக் குடியரசின் ஸ்தாபகருமான டிமிற்றோவ் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசிய மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கம் கூறினார்.

கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்ட செயலாளர் திரு. பொன். குமாரசாமி தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

''ஜோர்ஜிடிமிற்றோ தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்காகவும் தொழிற்சங்க வர்க்கத்தின் ஒற்றுமைக்காகவும் அயராது உழைத்து பல தியாகங்கள் இழப்புக்கள் மத்தியில் பல்கேரியாவில் ஒரு தொழிலாளிவர்க்க ஆட்சியை ஏற்படுத்தினார்.''

திரு அ. வைத்திலிங்கம் கூறியதாவது:

பதின்மூன்று வயதில் தனது குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு அச்சுத் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்த டிமிற்றோ உலகத்திலே பிரபலம் வாய்ந்த தலைவராக திகழ்ந்ததுடன் தனது நாட்டை நேசித்தார். ஒரு சோஷலிச அரசை நிறுவினர். இவருடைய வாழ்க்கை எமது நாட்டு தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக அமையவேண்டும்''. [மா]

# 31 வது ஆண்டு நிறைவு விழா

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 31 வது ஆண்டு விழா இம்மாதம் 4ம் திகதி நிலையத்தலைவர் திரு. ஆ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் எம்.பி. திரு வி. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ் முதல்வர் திரு. இரா விசுவநாதன், ஆணையாளர் திரு. சி வி. கே. சிவஞானம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு த. மாணிக்கவாசகர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் ராமசேவகர் திரு. டொமினிக் ஆகியோர் கலந்து கொள்வார்கள் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [க]

# மருந்துக்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தாபனமோ வைத்திய சம்மேளனமோ விரைவில் மருந்து கிடைக்க வழிவகைசெய்தால் நல்லது.

முடிவில்ஒன்றைக்கூறவிரும்புகிறேன் கோவைகமாக மேற்படி ஸ்தாபனத்தை திறந்து வைத்து அமைதியாக மூடிவிட முயற்சிப்பது யாழ்ப்பாணமக்களுக்கு மருந்து தேவையில்லை என்பதோ அல்லது மருந்து பற்றுக்குறையோ என்பது காரணமல்ல மேற்படி ஸ்தாபனத்தின் இயலாமையை பொதுமக்கள் அறியாமலா இருக்கப்போகிறார்கள். அத்துடன் முடிவில் அங்குகடமையாற்றும் ஊழியர்களின் நிலைமைதான் என்ன?

டாக்டர் கே. ஏ. தம்பிராஜா காசிநாதல்.

# விமானக்கடத்தல் 'ஹீரோ'வுக்கு அன்று 'தாய்ப்பாசம்' இன்று 'பிள்ளைப்பாசம்'!

இலங்கையின் முதலாவது விமானக் கடத்தல் மன்னராகத் திகழும் சேபாலா தனது பன்னிரண்டாவது வயதில் பிள்ளை பிடிகாரனிடம் சிக்கித் தப்பித்துக்கொண்டவராம்

இளம் வயதிலேயே தன் தாயாரை இழந்த இவர், சிற்றன்னையுடன் இருந்த போதுதான் இந்தச் சம்பவம் இவருக்கு ஏற்பட்டது. இளவயதில் தாய்ப் பாசத்துக்காகத் துடித்த இவர், இப்போ... தன் நான்குவயதுக் குழந்தையை பிரிந்திருக்க முடியாது, விமானத்தையே கடத்திக் கலக்கு கலக்கிவிட்டதில் ஆச்சரியமில்லை!

மாத்தறையில் 1949 ஆம் ஆண்டு 3ந் திகதி பிறந்த சேபாலா, ஹக்மனையில் கரத்தோட்ட மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்ருர். கல்விக்கு முழுக்குப்போட்டுவிட்டு மாத்தறையிலுள்ள மரக் காலை ஒன்றில் சிலகாலம் வேலை செய்தார். அவர் வேலைசெய்கிற நேரத்தில் மாமா முறையான ஒருவருடன்வசித்து வந்தார் அங்குதான் தனது மனைவி, குழந்தையுடன் பின்னர் சேபால வந்துபோனர்.

இவரது முந்திய சாதனைகள்.

ஆஸ்திரிய எல்லையில் வைத்து இரண்டு கிலோ போதை வஸ்துப் பொருட்களுடன் பிரபலமான 'ஓரியன்ற் எக்ஸ்பிரஸ்' ரயிலில் இவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். இவர் இருந்த ஆசனத்துக்குக் கீழ் இந்தப் போதை வஸ்துப் பொருட்கள் கட்டுக் கட்டாகக் கிடந்தன. அந்த ரயில் பெட்டிக்குள் இவர் ஒருவரே தனித்துப் பயணம் செய்ததால்' மிகச் சுலபமாக இனம் கண்டுகொள்ளப் பட்டார். அப்போது இவர் கொண்டுசென்ற பாஸ்போர்ட் 1974ம் ஆண்டு இஸ்லாமபாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தினல் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் இங்கு கைதுசெய்யப்பட்ட காலம்: 1974 ஆம் ஆண்டு 6ம் திகதி.

ஏப்ரல் 1981— 450 கிரும் போதை வஸ்துடன் யூகோஸ்லவாகியவில் கைதானர். இவரைக் கைது செய்தவர்கள் யூகோஸ்லாவியார்.

### மனைவி அன்ன

ஜூன் 30ம் திகதி, 1955ம் ஆண்டு பிறந்தவர் இவரது மனைவி அன்ன. இந்த இத்தாலிய அழகியை இவர் கைபிடித்தது 1977ம் ஆண்டு 22ம் திகதி.

இத்தாலியில் இவர்களுக்குக் குழந்தையொன்று கிடைத்தது. போதைப் பொருட்கள் கடத்தல் சம்பந்தமாக சேபால நாடு கடத்தப்பட்டார் மனைவி அன்னவுடன் 'தகராறு' பட்டுக்கொண்டு, தன் ஒரு வயதுகூட ஆகாத குழந்தையைக் கடத்திக்கொண்டு ஐரோப்பாவுக்குச் சென்ருர். நான்கு வயதுவரை குழந்தையைத்தானே வளர்த்தார், பிள்ளைப்பாசம் அவ்வளவு அவருக்கு!

இலங்கை வந்தார் தன் அருமைக் குழந்தையுடன்! தன் கணவர் குழந்தையுடன் இலங்கை வந்ததை அறிந்த அன்ன தனது சகோதரனைக் கூட்டிக் கொண்டு இலங்கை வந்து, குழந்தையைக் கொண்டு சென்றுவிட்டார்.

குழந்தைப் பாசம் வாட்டி வதைக்கத் தொடங்கிவிட்டது அப்பனுக்கு! கடத்தல் நாடகத்தை நடத்தி தன் குழந்தையையும், மனைவியையும் இருந்த இடத்துக்கே கொண்டுவந்து சேர்ப்பித்த சாதனை'யை நீங்கள் அறிவீர்கள்.

லெபனனில் கூட தான் பயிற்சி பெற்றதாகக் கூறும் இவர் இன்னென்றையும் சொல்கிருர்: இலங்கையிலுள்ள எந்த அரசியல் கட்சிகளுடனும் தனக்குத் தொடர்பில்லையாம்.

மூன்று தடவைகள் இவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிருராம்

33 வயதான இவர் 20 வய... இந்நாட்டை விட்டு வெளியேறி, ஐரோப்பிய நாட்டு வீதிகளில் வேலை இன்றி அலைந்து, கடைசியில் தன் சாமர்த்தியத்தால், அந்நாட்டுக்காரரே 'பிச்சை' வாங்கக்கூடிய வகையில், 'சாதனை'களைச் செ...ருக்கிருர்.

இவருக்கும் இவரது மனைவிக்கும் நெருங்கிய இணைப்பும், பிணைப்பும் உண்டு என்றே சொல்லலாம். தனது கணவரை மிக நன்கு புரிந்து வைத்திருப்பவர். போதைவஸ்துக் கடத்தலில் மனைவிக்கும் இவருக்கும் பங்குண்டு. இவருடன் கைதும் செய்யப்பட்டிருக்கிருர்.

ஐந்து ...டார் ...ட்ட யில் 60 லட்சம் ரூபாயுடன் தங்கியிருக்கும் இவர் அடுத்து என்ன செய்யப் போகிருர் என்பதைக் கடைசி நேரத்திலும் சொல்ல முடியாதாம்!

அவர் அப்படி!

# பரந்த.....

[4ம் பக்கத் தொடர்ச்சி]

லியார் முதலானேர் இக் பத்தின் ஒளி மணிகளாவர்.

### குமாரசாமி முதலியார்

உடுப்பிட்டி கதிர்காம முதலியார் மைந்தன் குமாரசாமி முதலியார் புகழ்பூத்த பெரும் புலவர் இவரின் மைந்தரே வைமன் கதிரவேற்பிள்ளை என்னும் பெரியார் குமாரசுவாமி முதலியார் எடுத்த எ...ப்பிலே பாடல்கள் பாடுவதில் வல்லவர். அக்காலத்தில் பிரபலிக்கமடைந்துவந்த காங்கேயன் துறைமுகத்துக்கூடாகச் குலோத்துங்கர் என்னும் பெரியார் இந்தியாவிலிருந்து கவர்ச்சிமிக்க ஆடைஆபரணங்கள், வெள்ளி, ..., பித்தளை, செம்பு முதலான உலோகங்களாலானபாத்திரங்கள் முதலியவற்றை ... மதி செய்து பெரியவர்த்தகராயிருந்தார்.

குலோத்துங்கர் நாடோறும் நேரந்தவருமல் மாவிட்டபுர ... வழிபடப ... ...ச்செதல் லிப்பழையிலிருந்து தமது அழகிய குதிரையில் போவதைக் கண்டு பெருமைப்பட்ட குமாரசுவாமி முதலியார் அகத்துறை நயந்ததுப்ப நாயக நாயகி பாவனையில் அழகிய பாடல் யாத்துள்ளார்.

''கொச்சைக் குறத்தி
கோமானைக்கும்பிட
மாவைப்பதிக்
கச்சைக் குதிரையின் மேலே
குலோத்துங்க
வள்ளல் செல்வான்
இச்சைப்பட்டாள்
மாவையப் மாள் என
இங்கழைத்து வந்தால்
பச்சைப் பசுங்கிளியே
பாலமிர்தம் பருக்குவனே''

குமாரசுவாமி முதலியார் திருவிற் சுப்பிரமணியர்பதிகம், மூளாய் சித்திவிநாயகர் ஊஞ்சல், நல்லைக்கலித்துறை, கந்தவனநாதர் ஊஞ்சல் முதலிய பிரபந்தங்கள் பாடியதோடு, நாடகத்துறையிலும் ஈடுபட்டு இந்திர குமார நாடகம் எழுதியுள்ளார். முதலியாரின் பாடல்களை வெகுவாகவியந்து நயந்தவர்களும் அருளம் பலம் என்னும் பெரியாரும் ஒருவர். அக்காலத்தில் அருளம்பலம் அம்பலவாணர் என்ற தலைமுறைதலைமுறையாகப்பெரும் புகழ்பெற்ற குடும்பத்தவருள் ஒருவரே ஆறுமுக நாவலர் அவர்களை முதன் முதற் பிரயாணமாக இந்தியாவுக்கு அழைத்துச்சென்று, அங்கே கல்வி முறைகளைக் கண்டறிந்து வந்தவர்.

அருளம்பலம் என்பவர் குமாரசுவாமி முதலியாரோடு உரையாடிமகிழும்போது ''இக் காலத்துப் புலவர்கள் கோவை பாடுவதில் தயங்குகிருர்கள்'' என்று கூறினுல்அதைக்கேட்ட முதலியார் அவ்வேளை ஒன்றுஞ் சொல்லாமல் ...றிவு விழித்திருந்து அருளம்பலம் அவர்களையே பாட்டுடைத்தலைவராகக்கொண்டு, அருளம்பலக் கோவை என்னும் பிரபந்தத்தைப் பாடிமுடித்தார்.

இத்தகை புலமையும்புகழும் வாய்ந்த பெரியவரின் மைந்தரேவைமன் கதிரவேற்பிள்ளை என்னும் பேரறிஞர். கதிரைவேற்பிள்ளை அவர்கள் சட்டத்துறை வல்லவர்அவரின் மேதாவிலாசத்தை வியந்த் தேசாதிபதி சேர் வில்லியம் கிரகா அவரை 1872ஆம் ஆண்டில் நீதவான் பதவிக்கு உயர்த்திக் கௌரவித்தார். அந்த நியமனக் கடிதத்தில் தேசாதிபதி அவர்கள் குறிப்பிட்ட வாசகம் தமிழர் எல்லோரையும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும் தன்மையது. ''விவேகமும் இயற்கையாற்றலும் முயற்சித்திறனும் இன்னபல இயல்பூக்கங்களும் கொண்ட இனிய சுபாபமுள்ள தமிழர்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழினத்துக்குத் தனிப் பெருமை தேடித்தந்த கதிரைவேற்பிள்ளை பெருஞ்செல்வர். பருத்தித்துறையில் ஊரிக்காட்டில் பெரும் பிரதேசம் அவரின் உரிமை. அவர் வட்டுக்கோட்டைச் சகலகலா நிலையம் என்னும் செமினரியில் படித்துப் பாண்டித்தியமுற்றவேளையில், வைமன் என்னும் பிரபுவின் பெயரையும் விசுவாசத்திற்காகத் தழுவினுர். அது புலமைப் பரிசில் காரணமாக வழங்கப் பெற்று ...பனையப் சுபற்ற பெயர்.

(நாளை முடியும்)

# விசாரணை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுளைவில் நியூ லோற் தொழிற்சாலை தொழிலாளர் வேலைநீக்கம் சம்பந்தமான விசாரணை கொழும்பு உதவி தொழில் ஆணையாளர் திரு. சே. விஜயரத்தின தலைமையில் யாழ்ப்பாணம் தொழில் இலாக்காவில் இம்மாதம் 6ம் திகதி காலை நடைபெறவுள்ளது. (மா)

# பண்ணிசை

[யாழ்ப்பாணம்]

மீசாலை புத்தூர்ச் சந்தி தட்டாங்குளம் விநாயகர் ஆலய விழாவில்இன்று சனிக்கிழமை, தாவடியூர் தேவார இசைமணி திரு. இரா. திருஞானசம்பந்தன் குழுவினரின் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

# யாழ். மாவட்ட சபை தேர்தல் வழக்கு செப். 13ல் தீர்ப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தல் ஆட்சேபவழக்குத் தீர்ப்பு செப்டம்பர் மாதம் 13ம் திகதி வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராசா இத்தேர்தலை ஆட்சேபித்து கொழும்பு அப்பில் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்திருந்தார்

இம்மனு, நீதியரசர்கள் ஓ. எஸ். எம். செனவர்த்தன ஜஸ்டின் அபயவர்த்தனஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. [க]

# 'உலகத் தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த வேண்டும்'

-- மேயர்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தின் விடுதலையைத் துரிதப்படுத்துவதற்கு தமிழீழ மாநாட்டில் மேற்கொள்ளவிருக்கும் தீர்மானங்கள் உலகத்தமிழினம் முழுவதையும் ஒற்றுமைப்படுத்தக் கூடியதாக அமையவேண்டும்''

யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா.விசுவநாதன், உலகின் முதல் சுதந்திரத் தமிழரசாக மலரவிருக்கும் உத்தேச தமிழீழ நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் மகாநாடாக நியூயோர்க் நகரில் ஜூலை 2,3,4-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மகாநாடு சிறப்பாகநடைபெறவேண்டுமென வாழ்த்தி விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

''தமிழீழத்தின் பெருநகரமாகிய யாழ். நகரின் முதல் மகனென்ற கோதாவில் இந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. விசுவநாதன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''அன்றைய இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற சம்பிரதாயங்களைப் புறக்கணித்து, பாராளுமன்றத்தைப் பக்கவாட்டால் கடந்து சென்று, கொழும்பு றோயல் கல்லூரியின் நாடக மண்டபமான ''நவரங்கலா'' மண்டபத்தில் கூடி, தம்மை இலங்கைத் தேசிய நிர்ணய சபையென அழைத்துக்கொண்டு பிரித்தானிய முடியுடன் இத்தீவுக்கு இருந்து வந்த அரசியல் தொடர்புகளைத் துண்டித்துக்கொண்ட (1972) போதே, 1619ல் யுத்த முனையில் போத்துக்கேயரிடம் பறிகொடுத்த தனது இறைமையை மீட்டுக்கொண்ட தமிழீழ நாடு, அதனது ஒரே ஒரு விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மகாநாட்டில், இறைமையுள்ள, மதசார்பற்ற, சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப், புனரமைப்பதென வட்டுக்கோட்டையில் வைத்து 14-5-1976ல் அகல்விரிவாகப் பிரகடனஞ் செய்திருந்தது

தொடர்ந்து 1977ல் இலங்கைத் தீவில் இடம்பெற்ற ஸ்ரீலங்காப் பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலையே தமிழீழ மக்கள் ஒரு சாசன வாக்கெடுப்பாகப் பயன்படுத்தி ஒரு தேசிய இனமாகத் தமிழ் மக்களுக்குரித்தான சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து, தமிழீழத்தை மீள்விப்பதற்கும், புனரமைப்பதற்குமாக தமிழீழத்தின் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலை கூட்டணிக்குஆணையை வழங்கியிருந்ததும் தெரிந்ததே

''ஆகவே, மீண்ட தமிழீழத்தின் இறைமையின் ஆதாரத்தின் மீதும், ஏலவே பிரயோகிக்கப்பட்ட தமிழ்ப்பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைவழியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் ஆதாரத்தின் மீதும் மேற்கொண்டு மேற்கொள்ளப்படவேண்டிய வழிவகைகளைஆராயப் போகும் தமிழீழத்தின் பேராளர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக.'' [மா]

## இன்று

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அத்தியடிப் பிள்ளையார் கோவில் மணவாளக்கோலத் திருவிழா உற்சவம் இன்று நடைபெறும்.

இரவி விசேட மேளக்கச்சேரிகளும், கதாப்பிரசகமும் இடம் பெறவுள்ளது.

● ● ● ●

சங்கரத்தை கரந்தைக் குளத்தை முருகன் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

காலை சங்காபுஷேகமும், பிற்பகல் மகேஸ்வரபூசையும் மாலை சண்முக அர்ச்சனையும், கதாப்பிரசங்மமும் விசேடமேளக்கச்சேரியும் நடைபெறவுள்ளது. வெ.

## தலைவராக தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவி பிரதேச சபைத் தலைவராக திரு. கா. வைத்தீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் மேற்கு கிராமோதய சபைத் தலைவரான இவர்' யாழ்மாவட்ட சுகாதார கல்வி உத்தியோகத்தராகவும் கடைமையாற்றுகிறார். [மா]

● ● ● ●

[கோண்டாவில்]

மானிப்பாய் தொகுதி பிரதேச அபிவிருத்திச் சபையின் தலைவராக திரு. செ. இலகுநாதன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இணுவில்கிராமமுன்னேற்றச் சங்கதலைவரானஇவர்இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலையத் தலைவரும் சுண்ணாகம் பொலிஸ் பொது மக்கள் நல்லுறவு சபைத் தலைவர், சமாதான சபைப் பிரதிநிதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணுவில் கிளைத்தலைவரும் ஆவார்.

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு ஸ்ரீ ஞான வைரவசுவாமிகோவில் அலங்கார உற்சவம் ஜூலை மாதம் 9ம் திகதிவரை 16 நாட்களுக்கு நடைபெறவிருக்கின்றது.

16ம் நாள் திருவிழாவான ஜூலை 9ந் திகதியன்று காலை சங்காபிஷேகம் நடைபெற்று மாலை விசேட அலங்காரங்களுடன் சுவாமி வீதிவலம் நடைபெறும்.

உற்சவகால கிரியைகளை சிவஸ்ரீ சு, மகாகணபதீஸ்வரக் குருக்கள் நடத்தி வருகின்றார். (கி)

## தனியான அலுவலகம்

(பண்டத்தரிப்பு)

காரைநகரில் தனியானதொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நிறுவுவது தொடர்பாகவட்டுக்கோட்டை எம். பி திரு. தா. திருநாவுக்கரசு காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

காரைநகர் பகுதியிலுள்ள கிராமோதய சபைத் தலைவர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட மற்றும் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன்இதுவிஷயமாக தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [சு]

T. V. ஏரியல் அமைப்பில்

முதன்மைமிக்க ஸ்தாபனம்

சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை

T V யில் சிரமமின்றி பார்க்க

உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.

நொடிப்பொழுதில், T V ஏரியல்

கோளாறுகளை சரி செய்யலாம்.

எமது பராமரிப்பு சேவை

24 மணி நேரம் செயல்படுகின்றது

சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்

எடுப்பதற்கு

குறைந்த கட்டணம்

பல்வேறு TV செட்டுகளை

பிளுன்ஸ் வசதியுடன் பெறலாம்.

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்.

ஸ்ரீதர் தியேட்டர் முன்,

யாழ்ப்பாணம்.

## சமுதாய பேதங்களைச் சாடியவர்

ஒரு சில தலைவர்களும் ஒரு சில சீர்திருத்தவாதிகளும் சாதி மத பேதத்தை சாடுவதோடு மட்டும் நின்றுவிடுகிறார்கள். ஆனால் சாதாரணமாணவனான சிறிதேவன் ரவீந்திரனோ சாடுவதோடு மட்டும் நின்று விடாமல் சாதி ஒழிப்பு நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுத் தன் சகாக்களை ஈடுபடவும் தூண்டினார். இத்தகைய ஒரு இளம் சீர் திருத்தவாதி இன்று இவ்வுலகில் இல்லை. அன்னார் அகால மரணமெய்தி ஓராண்டு பூர்த்தியாகிறது.

இந்தப்பத்தொன்பது வருகாலத்திற்குள் மாணவனாக இருந்துகொண்டே பலரின் நன்மதிப்பைப் பெற்ற மாணவ சமுதாயத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்த இவர் கல்வி கற்கும் காலத்திலேயே தீவிர சமுதாய விடுதலைவிரும்பியாகத் திகழ்ந்தார். தனது ஓய்வு நேரங்களில் லெனின், கார்ல் மார்க்ஸ் தத்துவஞானிகளின் கொள்கைகளைக் கற்றுத் தேர்ந்து தத்துவார்த்த ரீதியிலே வளர்ச்சியடைந்து சிறந்த கொள்கை உறுதியுடையவராகத் திகழ்ந்தார். நேர்மையுடனும், நற்சிந்தனையுடனும், நற்பண்புடனும்வாழ்ந்ததால் சகமாணவர்களும் ஆசிரியர்களும் இவனர செல்லமாக நல்லவன் என்று அழைப்பர். இறக்கும தறுவாயில் கூடதன் சக நண்பர்களை அழைத்து விடுதலைக்காகப் போராடுங்கள் என்று கூறினார் இத்தகைய விடுதலை விரும்பியின் இழப்பு அன்னாரது குடும்படுத்துக்கும் சமுதாயத்திற்கும் இழப்பாகும்.

க. இராஜேந்திரன்.

மடுதிருவிழாவில்

## யாத்திரிகரிடம் நகைகள் கொள்ளை!

(வவனியா)

புதுக்குடியிருப்பில் 26 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளதாக பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செல்லையா இரத்தினபாக்கியம் என்பவரது வீட்டில் கடந்தமாதம் 27ம் திகதி 26 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி சங்கிலி திருடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புலன் விசாரணையை முல்லைத்தீவு பொலிசார் மேற்கொண்டுள்ளனர்

இதே நாளில் மினுவாங்கொடயிலிருந்து வந்து மடுத்திருப்பதியில் வந்து தங்கியிருந்தத ஒருவரிடமிருந்து 7300 ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கடணமும் களவாடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மடுத்திருவிழாவுக்காக அங்கு தங்கியிருந்த வல்பொலேரேட் மினுவாங்கொட எஸ் பி அந்தனி பெரேராவிடமிருந்து 2 பவுண் சங்கிலி, 3 கைக்கடிகாரமு, 3500 ரூபா ரொக்கப் பணம் களவாடப்பட்டுள்ளதாகவும் முருங்கன் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி முருங்கன் பொலிசார் புலன்விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (க)



பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சில் பத்து மாதங்கள் பயிற்சியின் பின்னர் நடத்தப்பெற்ற விளையாட்டுத் துறைக்கான டிப்ளோமா பரீட்சையில் செல்வி ஸ்ரீ வசந்தா கந்தசாமி சித்தி பெற்றுள்ளார்.

யாழ். கச்சேரியில் இலங்கை நிர்வாக சேவையிலிருந்து இளைப்பாறியவரும், சமாதான நீதிவானுமான திரு கந்தசாமியின் புதல்வியான இவர், உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவர்.

கல்லூரியில் வலைப்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கிய இவர், பல வருடங்கள் அக்கல்லூரி வலைப்பந்தாட்டக் குழுவுக்கு தலைவராக இருந்தார். வடபிராந்தியத்தின் சாம்பியனாக அக்கல்லூரி திகழ்ந்தது. மன்னார் கச்சேரி, அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய இடங்களில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தராக சேவை ஆற்றிய இவர் இப்பொழுது பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமை ஏற்றுள்ளார். மன்னார் மாவட்டத்தில் கடமைசெய்தகாலத்தில் ஆற்றிய சேவைக்காக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் விசேஷ பாராட்டுப் பத்திரம் பெற்றவர் இவர். என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு பைந்து பால் ரூ. 2-50

(புலோலி)

இலங்கை தேசிய பாற்சபையினால் விற்பனை செய்யப்படும் பாலை ஒரு பைந்து ரூ.2-50க்கு மேல் விலைகொடுத்துவாங்க வேண்டாமென யாழ்மாவட்ட பாவனையாளர்சங்க சமாசத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் பாவனையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

தேசிய பால்சபையின் பால் யாழ் மாவட்டத்தில் பல விலைகளில் விற்பனைசெய்யப்படுவதாக இம் மாவட்டத்தின் பலபகுதிப் பாவனையாளர்களும் யாழ் மாவட்ட பாவனையாளர் சங்கத்திடம் புகார் செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து சமாசத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் இலங்கைத் தேசிய பால்சபையுடன் தொடர்பு கொண்ட போது சபை யாழ். மாவட்டத்தில் ஒரு பைந்து பாலின் விலை ரூ. 2-50 சதமே என்று தெரிவித்ததைத் தொடர்ந்தே பேராசிரியர் கணேசலிங்கம் பாவனையாளர்களுக்கு மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்' (க)

## நோயாளர் கஷ்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கயரோகத்தால் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிப் பணம் உரியகாலத்தில் வழங்கப்படுவதில்லையென கூறப்படுகிறது.

அத்துடன் மன்னார் அரசினர்ஆதாரவைத்தியசாலைக்கு யாழ் பண்ணை வைத்தியசாலையிலிருந்து வருகைதரும் வைத்தியநிபுணர் கடந்த 2 மாதங்களாக மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வராததினால், மன்னார் பகுதியைச் சேர்ந்த சுமார் 30 சயரோகநோயாளர்கள் வைத்திய பரிசோதனை கிடைக்காது பல கஷ்டங்களை அனுபவித்துவருகிறார்கள் எனவும் கூறப்படுகிறது. (க)

## தும்பளை மாதிரிக் கிராம அபிவிருத்தி

(புலோலி)

இலங்கைக் குடும்பத் திட்ட சங்க யாழ்மாவட்டசெயற்குழு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தும்பளை கிராமத்தை மாதிரிக் கிராமமா தெரிவு செய்ததையடுத்து அக்கிராமத்தை அபிவிருத்திசெய்வதற்கான துரித நடவடிக்கைகளை இலங்கைக் குடும்பதிட்ட சங்க யாழ் மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு ஏ.வி பூவேந்திரன் மேற்கொண்டுள்ளார்.

ஒன்றிணைக்கப் பட்ட கிராமிய குடும்பநதத் திட்டத்தின் கீழ் தும்பளையின் அபிவிருத்திக்குத் தலைவராக திரு எம்.ஏ. நடராசாவும் செயலாளராகச் திரு. எஸ். சிவபாதமும் உப செயலாராக செல்வி கலாமதி தெய்வநாயகமும், பொருளாளராக செல்வி என் கந்தையாவும், தொண்டர் குழுத்தலைவராகத் திரு மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முத்து) யும் தெரிவு செய்யப்பட்டனர்

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தென்மேற்கு விழிசிட்டி வீரபத்திர சுவாமி கோவில் புனராவர்த்தன சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் இம்மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ளது.

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
சட்டம் என்கையில்

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயசுதா
பந்தாட்டம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 8-வது வசூல் வாரம்
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
நடித்த
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன்—ஜெயலலிதா நடித்த
சூரிய காந்தி

Windsor (Jaffna) 2nd Crowded Week
Daily 10-30, 2-00, 4-30,
7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான
கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
லொறி ட்ரைவர்
ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30, 9-45

7-வது வெற்றி வாரம்
கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
தங்கவேலு, நாகேஷ்.
கடல்
மீன்கள்
—கலர்—

றீகல்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30
6-15, 9-30
3-வது
ஜனத்திரள்
வாரம்
சிவாஜி,
கீதா குமாரசிங்கா,
ஜெயபாரதி

மோகனப் புன்னகை


## பெரிய புராணச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழாக்காலங்களில் அகில இலங்கைச் சைவ மகா சபை, பெரியபுராணச் சொற்பொழிவைத் தொடர்ந்து நடத்திவருகிறது. எட்டாம் திருவிழாவாகிய இன்று ''நந்தனர்'' பற்றி பண்டிதர் திரு. இராசையா அவர்கள் பேசவுள்ளார்கள்.

## நாவல் விமர்சனம்:

# டானியலின் 'பஞ்சமர்'

''நாவல் இலக்கியம் தான். ஆனால் இந்த இலக்கிய வகை வரலாற்று நேர்மையுடைய ஓர் ஆவணமாக வாழ்க்கையை எடுத்துக் காட்டும் மூலகங்களில் ஒன்றாக அமைந்துள்ளமையை டி. எச். லோறன்ஸ் முதல் டானியல் வரை......'' கண்டுள்ளதாகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஒருமுறை குறிப்பிட்டதை டானியலின் இரண்டு பாகங்களும் சேர்ந்த 'பஞ்சமர்' நாவலை மீண்டும்மீண்டும் படிக்கும் வாய்ப்புஏற்படும்போதெல்லாம் ஞாபகப்படுத்தவே செய்கின்றது. உறுத்தவும் செய்கின்றது

தமிழகத்தில் டானியலின் 'பஞ்சமரை' முழுமைப்படுத்தி இரண்டாம் பாகமும்இணைத்து வெளியிடும்சந்தர்ப்பம்கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியுற்று; தமிழக மக்களுக்கு இந்த நாவலைத் தருகிற இரட்டிப்புச் சந்தோசத்தோடு — பதிப்பாசிரியர் பிரகாஷ் கூறுகிறார்:

''யாழ்ப்பாணப் பிரதேசம், அதன் தமிழ்ப் பேசும் மக்கள், அங்குள்ள சாதி வெறி, அங்குள்ள தாழ்த்தப்பட்டமக்கள், அவர்களின் பிரச்னைகள், அவர்கள் பேசும் தமிழ், அதன் சங்கீத ஜாலம், அது மக்களோடு புரளும் தன்மை, அவர்களின் நம்பிக்கை, அவர்களின் அரசியல், அவர்களின் காலம் இப்படி எல்லாவற்றையும் அபூர்வமாக சித்தரிக்கிற நாவல் என்கிற காரணத்தினால் மட்டும் நான் பஞ்சமரைப் பதிப்பிக்க முன்வரவில்லை. பஞ்சமர் ஒரு நாவலின் சிறந்த அம்சங்களில் மட்டுமல்ல — அதற்கும் அதன் சிறப்புக்களின் உச்சமே அதன் சத்தியத்தில்தான் அடங்கியிருக்கிறது.!'' பதிப்பாசிரியர் பிரகாஷ் அவர்களின் இக்கூற்றுக்கள் எமக்குப் பெருமையைத் தருகிறது.

ஏனெனில், ''எந்தக் காரணத்திற்காக அரசினர் தடுப்புக் காவலில் வைத்திருந்தனரோ அதே அரசினர் அதற்காகவே எழுதப்பட்ட பஞ்சமருக்கு 1973-ம் ஆண்டில் சாகித்திய மண்டலப் பரிசில் தந்ததும், தொடர்ந்தும் 1975-ம் ஆண்டிம் 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' என்ற சிறுகதைத்தொகுதிக்கும் பரிசிலைத் தந்ததும் ஏன் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. உலக இலக்கிய வரலாற்றில் இப்படிப் பரிசுகளைப் பெற்றவர்கள் அதன் மூலம் திசை திருப்பப்பட்டிருப்பது கண்கூடு...' என்று நூலாசிரியர் தமதுரையில் துணிச்சலாகக் கூறுவதிலிருந்து புகழ்ச்சிக்கு மயங்காத—விலைக்குவாங்கிவிட முடியாத நேர்மையாளராக நிமிர்ந்து நிற்கும் இப்படைப்பாளியின் நூல் பற்றிய மதிப்பீட்டை புகழ்ச்சி என்பதற்குப் பதிலாக கொள்கை ஏற்பு வழிபாடாகவே கொள்ள வேண்டும்.

''இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் எங்கெல்லாமோ இருந்து பிறந்தவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் அடிமைகளாயிருந்தவர்கள் கீழ்மட்டத்து மக்கள், இந்த எளியமக்கள் எப்படி ஒருஅரசியல் நிறத்துக்குள்ளே இயல்பால்—தானாய் இழுத்துச் செல்லப்படுகின்றனர் என்பதும் உலகளாவிய ஒரு தத்துவத்தின் முதல்வர்களாய் எப்படி மாறுகின்றனர் என்பதும், அந்தப் போராட்டத்தின் நாயகர்களாக எப்படி உருப்பெறுகிறார்கள் என்பதும் சகல தத்துவ வாதிகளும் படித்து உணரப்படவேண்டியவை. தமிழ் நாவல்துறை இதன்முன் காணாததொன்று இது. உதாரணமாக, ஒருசிறு நாட்டில், ஒரு மூலையில் ஏற்படும் ஒரு சாதிக் கலவரம் சாதி ஒழிப்புப் போர் மட்டுமல்ல பஞ்சமரில் சித்தரிக்கப்படுவது, சாதி எதிர்ப்பால் புரிந்து கொள்ளப்படும் மக்கள் சக்தி கொஞ்சம் கொஞ்சமாக அதன் வேகத்தோடு வளர்ந்து ஏழை மக்கள் காணும் வாழ்க்கைக் கனவுகளை நனவாக்கும் பணியைத் துரிதப்படுத்துமளவுக்கு அது உயர்ந்து மிகமுக்கியமான பலமாய் அது நிற்கும் என்பதை இந்த நாவலைப்படிக்கும் யாவரும் உணரமுடியும்.

இதன் ஆசிரியர் டானியல் யார்? சின்ன வயதிலிருந்தே இந்த மக்களோடு தசையும் நாருமாகக் கலந்து நின்றவர். இலக்கியம் அவருக்கு இரண்டாம்பட்சமானது. புரட்சிகரச் செயற்பாடுகளிலிருந்து தான் புரட்சிகர இலக்கியங்கள் தோன்றவேண்டும் என்று கூறுபவர். அவரின் அனுபவமுதிர்ச்சிக்குமுன்னால்—அவரின் இயங்கு சக்திக்கு முன்னால் வியப்பான மதிப்பிற்குரிய தரிசனம் பெற வேண்டும்.

''இந்தப் பஞ்சமரில் நானும் ஒருவனாக நிற்கிறேன். அறிவறிந்த பருவமுதல் இன்றுவரை இந்த மக்கள் கூட்டத்தினரின் பிரச்னைகளில் பங்கு கொண்டுவருகிறேன்'' என்று நாவலாசிரியர் டானியல் நெஞ்சுருகத் தமதுரையில் எமக்குத் தம்மைத் தெளிவாக்குகிறார். அனுபவ ரீதியான இலக்கியம் மிகமிக உசத்திபெறுவது தவிர்க்கமுடியாதது தானே!

நாவலின் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் மனதைப்பாதித்து நிற்கின்றது. நாவலுக்குரிய பாத்திரங்களின் படிப்படியான இயங்கு-இயக்க வளர்ச்சி சிறப்பாகக் குறிப்பிடப்படக்கூடிய தொன்றாகும்.

ஒரு கள்ளுக்கடையிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட ஐயாண்ணர் என்ற பாத்திரம் மனதைவிட்டு அகலமுடியாமல் இருப்பதையும், வெறும்சிறைக் குட்டிகளான நடுச்சாதியைச் சேர்ந்த சின்னாச்சியும், கிட்டினுவும் நாவல் முடிவில் பெற்றிருக்கும் அந்தஸ்துக்குமிடையே அந்தப் பாத்திரங்கள் வளர்க்கப்பட்டு வந்த வாகும் வாலிபர்களான குமாரவேலும், கணேசனும் சலவைத் தொழிலாளியான செல்லப்பனும், மகன்முத்துவும் படிப்படியாகப் பெறும் அரசியல் உணர்வும், மாயாண்டி, சிறிசேன போன்ற பாத்திரங்களின் ஊடான தேசிய ஒருமிப்பின் வெளிப்பாடும், எதுவுமே பேசமுடியாத வீமன் நாயின் செயற்பாடும், இழப்பதற்கு எதுவுமே இல்லாத கீழ்மட்ட மக்களின் தியாகங்களுக்கஞ்சாத நடவடிக்கைகளும் இதுவரை ஈழத்தில் வெளியான எந்த நாவலுக்குமில்லாத யதார்த்தப் பாத்திரச்சிறப்பு என்பதை சத்திய உணர்வோடு காழ்ப்புணர்வேதுமின்றி படிப்பின் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

இரண்டு பாகத்துடன் தென்னகத்தில் பதிப்பிக்கப்பட்ட இந்நாவல் பதிப்பு முறையில் அவசரக் கோலம் காணப்படுகிறது. எழுத்துப்பிழைகளோடு பாதிப்பு நிரப்பலிலும் காணப்படும் குறைபாடுகள் முகத்தைக் கோணச் செய்கிறது (தென் இந்தியாவைவிட எமது நாடு பரவாயில்லையோ?) ஆயினும், நாவலின் உள்ளடக்கமும் நடையும், அட்டைப்படத்தின் அழகியல் செறிவும் மனதைத் தேற்றுகின்றது

தமிழில் வெளிவந்த நாவல்கள் எதிலுமே இல்லாத ஒரு வித்தியாசமாக இந்நாவலின் பிற்பகுதியில்பல்வேறுஉண்மை வரலாற்று செய்திகளை வரலாற்றுஆய்வாளருக்கு—படைப்பாளிகளுக்கு உதவியாக அழகிய குறிப்புகளாகத் தந்து பரிசோதனை ரீதியிலான வெற்றியை இந்நாவலாசிரியர் கண்டிருக்கிறார்.

பல்லவர், சேர சோழ பாண்டியர் மற்றும் சங்கம் மருவியதும், சங்க காலத்திற்கு முன்னனதுமான ராசா — ராணிக் கதைகளையே இதுவரை வரலாற்றுக் கதைகளென மயங்கி வந்த எமக்கு 'பஞ்சமர்' நாவல் கடந்த கால, சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் புரட்சிகர யதார்த்த வரலாற்று நாவல்என்ற தெளிந்த உண்மையைத் துலாம்பரமாக எமக்குப் பளிச்சிட வைக்கிற போதெல்லாம் டி. எச். லோறன்சையும்விட, மார்க்ஸிம் கார்க்கியிலிருந்து கே. டானியல் வரை என்ற மதிப்பீட்டு முன்வைப்பே சிறப்புக்குரியதென 'பஞ்சமர்' நாவலைப் படிப்போர் நிட்சயம் உணரலாம்.

- சங்கு சக்கரன் -

## 'பஞ்சமர்' நாவல் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கே. டானியலின் நாவலான இருபாகங்கள் கொண்ட பஞ்சமர் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறுகின்றது ஆசிரியர் கே கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் சந்திரசேகரம் தொடக்கவுரை நிகழ்த்துவார். நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பண்பாட்டுத்துறைத் தலைவர் கலாநிதி அ சண்முகதாஸ். சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராசா முதற் பிரதியைப் பெறுவார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன், எம். ஏ. நுஃமான், உ. அ அதிபர் சி. பற்குணம், சி. மௌனகுரு, ஆசிரியர் கே. தங்கவடிவேல், நந்தினி சேவியர், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் உட்படப்பலர் விமர்சனஉரை நிகழ்த்துவர்.

## பொன்னுன

[4-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்கு ஒரு 'சாம்பிள்'. ஹாக்கி யாழ்ப்பாண விளையாட்டுத்துறையில் புகுத்தப்பட்டு நடைபெற்ற முதலாவது ஆட்டம். நிறையக் கூட்டம், அதனை மைதானத்துக்குள் நுழைத்துவிடாமல் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார் ஒரு அதிகாரி சுயபுராணம் பாடுவதில் புலி. 'தியாகு, உனக்குத் தெரியுமே — நான் இங்கிலாந்திலிருந்தபோது இந்திய ஹாக்கிக் கோஷ்டிக்கு 'ரிஸர்வ்' ஆக இருந்தநான் என்று ஆரம்பித்தார். தியாகருக்கோ தன் கடமையில் கண்ணும் கருத்தும், கரிசனை ',சும்மா விழல் அலட்டாதேயுங்கோ. இதுதானே உங்களை விசரன், பைத்தியகாரன் என்று எல்லாரும் சொல்றது'' என்று அலட்சியமாக தூக்கியெறிந்து கூறிவிட்டார். அப்புறம் தன் தவறை உணர்ந்திருக்க வேண்டும். இடைவேளையின் போது சிரித்த முகத்துடன் வந்தார். அதிகாரியைப் பார்த்து ''ஆ! இனிச் சொல்லுங்கோ அப்போது என்னமோ சொல்லத்தொடங்கினியள்?'' என்று போட்டாரே ஒரு போடு. அதிகாரிக்கு'ஐஸ்' வைத்து விட்டார். விஷயத்தை மழுப்பி 'ஷேப்' பண்ணிய கெட்டித்தனம்!

அவர் சிவபதமெய்திய பின் நடைபெறும் முதலாவது மெய்வல்லுநர்ப் போட்டி இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது. அதனால் அக் கல்லூரியிலும், யாழ்ப்பாணத்திலும், வட இலங்கையிலும் — ஏன் அகில இலங்கையிலும் விளையாட்டுத்துறையில், அதன் வளர்ச்சியில் அவர் ஈட்டிய சாதனைகளை நினைவு கூர்ந்து சிரம்தாழ்த்தி ஈழநாடே அஞ்சலி செலுத்துகிறது.

இ. மகாதேவா

## உயர்கல்வி

3ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கைவாழ் எல்லாஇன மக்கள் எங்கு வாழ்ந்தாலும் சமநீதியும் சமசந்தர்ப்பமும் வழங்கும் என அறைகூவும் இந்த அரசாங்கம் தென்பகுதி வாழ் தமிழ் மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்க வேண்டும்''. [நா]



ஈழத்து எழுத்தாளர் கே. டானியலின் 'பஞ்சமர்' வெளியீட்டு விழா தஞ்சாவூர் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் பேராசிரிய பாரதிப்பித்தன் தலைமையில் நடைபெற்றபோது திருமதி டொறத்தி கிருஷ்ணமூர்த்தி நூலை வெளியிட்டு வைப்பதையும் திரு. அறிவுருவன் பேசுவதையும் அருகில் நூலாசிரியர் கே. டானியல், பேராசிரியர் மார்க்ஸ் ஆகியோர் இருப்பதையும் காணலாம்.

## 'நியூயோர்க்கில் இன்று ஆரம்பமாகும் தமிழீழ விடுதலை மாநாடு வெற்றிபெறவேண்டும்'

— தருமலிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கோரிக்கையை தேர்தல் அரசியலாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆத்மீக ரீதியாக தமிழீழத்தின் விடுதலையை நோக்கி உலகத் தமிழர் அனைவரும் ஒன்றுசேர்ந்து நியூயோர்க்கில் நடத்தும் உலகத் தமிழ்விழா வெற்றிபெறுமென்பதில் ஐயமில்லை'' என்று தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் ச. அ. தருமலிங்கம் தெரிவித்துள்ளார்.

டாக்டர் தருமலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது..

1972 ஆம் ஆண்டில் மீளப் பெற்ற தமிழ் ஈழத்தின் இறைமையையும், 1977 ஜூலைப் பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் வகையில்பிரயோகித்துவிட்ட சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட ஆணையையும் ஆதாரமாகக்கொண்டு ஏலவே முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருந்து இலண்டன் தீர்மானத்துக்கு அமைவாக 1982 ம் ஆண்டு ''பொங்கல்'' நன்நாளில் ஒரு தலைப்பட்சமாகத் தனது சுதந்திரத்தை நியூயோர்க்நகரில் ஐ. நா. தலைமை அலுவலகத்தின் முன் டாகப் பிரகடனப்படுத்தியுள்ள தமிழ் ஈழநாடு, தனது விடுதலையை விரைவுபடுத்த அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு வியூகம் அமைப்பதற்காக இவ்வாண்டு ஜூலைத் திங்கள் 3 ம் 4ஆம் நாட்களில் உலகத் தமிழீழ மாநாட்டைக் கூட்டுகின்றது.

தமிழீழ நாடு மீள்வித்துக் கொண்ட இறைமையின் மேலும், தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணயப் பிரயோகத்தால் முடிந்த முடிபாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும் ஒரு தலைப் பட்சமாகத்தனது சுதந்திரப் பிரகடனத்தைச் செய்துள்ள தமிழீழ நாடு அதன் அடுத்த அறிவிப்பை மேற்படி மாநாட்டில் வைத்து அறிவிக்கும் என்ற ஏழு உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு வீண் போகாதென்பதே எமது நம்பிக்கையாகும்.

தற்பொழுது உலகத்தமிழீழ மாநாட்டைக் கூட்டியிருக்கும் தமிழீழப் போராளிகள் தமிழினத்துக்கான ஒரு அரசமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஒரு நிபுணர் குழுவை நியமித்திருந்ததும் தமிழீழத்துக்கான ஒரு தேசியக் கொடியை அதற்கு முன்பே அங்கீகரித்திருந்ததும் தெரிந்ததே.

நியூயோர்க் நகரில் நடைபெறும் மாநாடு தமிழீழ நாட்டின் அரசமைப்புத் திட்டத்தை அங்கீகரிப்பதோடு தமிழ்இனத்துக்கான கரந்து வாழும் ஓர் இடைக்கால அரசையும் தோற்றுவிக்க முன்வரக்கூடுமென்பதே தமிழீழ விடுதலைப் போராளிகள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

தமிழீழ விடுதலை அணியின் சார்பில் உலகத் தமிழீழ மாநாடு வெற்றி சிறக்க வேண்டும் என்று நாமும் அவர்களோடு சேர்ந்து எமது வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (மா)


# ஹோம் பினான்ஸ் லிமிட்.,

82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

## விற்பனை

எம்மிடம் பாவித்துக் கழிக்கப்பட்ட பத்து (10) பஸ் ரயர்கள் விற்பனைக்கு உண்டு. இவற்றை வாங்க விரும்புவோர் எமது கந்தோரில் வந்து ரயர்களைப் பார்வையிடலாம்.

முகாமையாளர்,
ஹோம் பினான்ஸ் லிமிட்.
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8310



இதுவரை A/L விஞ்ஞான பாடங்களை மட்டும் நடாத்தி வந்த எமது 3 நிறுவனங்களிலும்

# A/L 1983 1984 பரீட்சைகளுக்கு

விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை
பிரிவுகளுக்குமான எல்லா பாடங்களுக்குமான
புதிய வகுப்புகள்

ஆரம்பம் 5 7-1982

# BOND INSTITUTES

274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்: 1. 72, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. 81, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

Phone 8258 Grams: BOND


# மரண அறிவித்தல்

## செல்வி கௌதமி மௌனகுரு

யாழ்ப்பாணம், 57, பிறவுண் வீதியைச் சேர்ந்த கௌதமி மௌனகுரு காலமானார். இவர் மௌனகுரு (ஆசிரியர், ஒஸ்மானியா கல்லூரி), சித்திரலேகா (விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரது அன்பு மகளாவார். அன்னாரது நல்லடக்கம் இன்று (03-07-82) சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் இடம்பெறும் 3748

# அரசியல் சர்ச்சைக்கு மத்தியில் தமிழ்ஈழ மாநாடு இன்று ஆரம்பமாகிறது

[நியூயோர்க்]

நியூயோர்க்கில் இன்று பெரும்அரசியல் சர்ச்சைக்கு மத்தியில் ஆரம்பமாகும் தமிழ் ஈழ மகாநாட்டில் இலங்கை, இந்தியா, கனடா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இலங்கையைச் சேர்ந்த 125 பேர் இம்மகாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

அரசியல் ரீதியில் இம்மகாநாட்டில் காரசாரமான விவாதங்கள் இடம் பெறும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

திரு. வைகுந்தவாசன் இம் மகாநாட்டுக்கு கொண்டுவரும் 'தமிழ்ஈழ' இடைக்கால அரசை அமைக்கும் பிரேரணை மீது பலத்த வாக்குவாதங்கள் இடம் பெற்றும் அப்பிரேரணை நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நியூயோர்க் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க சுதந்திரதினமான இன்று இம்மகாநாடு ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. [ம-இ]

## ஐந்து...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரர் தமது மனைவி மகனுடன் இன்டர் கொன்டினென்டல் ஐந்துநட்சத்திரக் ஹோட்டலில் தங்கியிருந்து சுகம் அனுபவிக்கின்றார்.

தாம்தங்கியிருக்கும் ஹோட்டலிலிருந்து 'பட்டிக்' சேர்ட்டுடன் வங்கிக்குச் சென்ற எக்கநாயக்காவிடம் வீதியில நின்றஒருவர் ''நீர்ஒருவீரனா''? என்று கேட்டபோது ''நான் ஒருசாதாரண் மனிதன்எனப்'' பதில் அளித்தாராம்.

ஹோட்டலில் 'பட்டிக்' ஷேர்ட்டை வாங்கிய எக்கநாயக்கா ஹோட்டலில் உள்ள கடையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு 150 ரூபா சந்தோஷம் கொடுத்ததாராம், இவர் அணிந்திருந்த ஷேர்ட்டின் பின் புறத்தில் 'என்னைப் பின் தொடரு'' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

இவர் தங்கியிருக்கும் ஹோட்டலைச் சுற்றி ஏராளமான மக்கள் காத்திருந்தனர். ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.(ம-இ)

## இடுப்பில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடத்தல்காரர் ஒரு ஏமாற்று நாடகமே ஆடியிருக்கிறார் என்றும், அவரின் சகாக்கள் ஒருவர் கூட வெடிகுண்டுகளுடன விமானத்தில் இருக்கவில்லை என்றும் பாங்கொக்கிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

## டாலரை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேபால தமது அடையாளத்தை உரிய முறையில் நிரூபிக்கத் தவறிவிட்டமையினாலேயே அவர் வைப்பிலிடக் கொண்டுவந்தபணத்தைவங்கி ஏற்றுக்கொள்ளவில்லை என வங்கி உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (ம-இ)

## தமிழ்ஈழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மையிலுமே தங்கியுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வரும் திரு. அமிர்தலிங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைகள் மூலம் தமிழ் மக்களுக்குச் சுயாட்சி ஏற்படுத்திக் கொடுக்க முயற்சித்து வருகிறார்.

இவ்வேளையில் இலங்கைத் தமிழ் மக்கள் தமது அடுத்த கட்டம்பற்றி தீர்க்கமான நிலையிலிருந்து முடிவுசெய்ய வேண்டும்.

1981-ம் ஆண்டு ஜனவரியில் தமிழ் ஈழ பிரகடனம் செய்ய முயன்றேன். திரு. அமிர்தலிங்கத்தின் நடவடிக்கை காரணமாகவே அந்த யோசனையைக் கைவிடநேர்ந்தது.

## பொலிஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

யையும் பார்வையிட்டபின்னர் பிரேத பரிசோதனை நடத்துமாறு யாழ் சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை யாழ். பொலிஸ் அதிபர் ஊடாக சொந்தக்காரர்களிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

## இன்று மரணவிசாரணை

இன்று காலை சம்பவம் நடைபெற்ற இடத்தில் மரணவிசாரணையை திரு. மகேசன் நடத்துவார்.

## ஸ்கந்தா பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தாபகர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்(நந்தி) கலந்து கொள்வார்.

## யாழ்.செயலகத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அமைச்சர் திரு. யு.பி. விஜயக்கோன் இந் நிலையத்தைத் திறந்துவைப்பார்.

அரசாங்க வர்த்தமானி, புதிய சட்ட அறிக்கைகள். ஹன்சார்ட் உட்பட பல முக்கிய அரசாங்க வெளியீடுகளையும் மற்றும் தகவல் திணைக்கள வெளியீடுகளையும் பொதுமக்கள் இந்நிலையத்தில் பெறலாம்.

கிழமை நாட்களில் காலை 9மணி முதல் 12 மணிவரையும் பிற்பகல் 1 மணி முதல் 3மணி வரையும் திறந்திருக்கும் இந்நிலையத்தில் மேற்கண்ட பிரசுரங்களை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பெறலாம்.

மாணவர்கள், ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி வர்த்தகர்களுக்கும் மேற்படி நிலையம் பேருதவியாகவிருக்கு என்று எதிர்பார்க்கப்படுகிறது


# கேள்வி அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் 10 – 08 – 1982 முதல் -1982 வரையும் நல்லூர்க் கல்யாண மண்டப வளவில் தொடர்ச்சியாக நிறுத்தி வைத்து இரவு 6-00 மணி முதல் இரவு 9-00 மணி வரையும் உபயோகிக்க 50 மீடிறன் (கேட்ஸ்) 400/230 உவோல்ற் 10 முதல் 20 வரையான கி. வோ. அ. கொண்ட ஆடலோட்ட பிறப்பாக்கி ஒன்று தேவை.

இச்சேவையை வழங்கக் கூடியவர்கள் நாளொன்றுக்குத் தாங்கள் கோரும் கூறுவிலையைக் குறிப்பிட்டுப் பதிவு அஞ்சல் மூலம் ''ஆணையாளர், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்'' என்ற முகவரிக்கு 15-07-1982-ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

சீ.வி.கே. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
02 – 07–1982.

3744


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆடு ஜூலை மீ 3-ட திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.